ISSN 1391-9504

பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# விஜய்

Vijey விஜய்

11.03.2009 - மலர் 06, இதழ் 01



## நிலவுக்குச் சென்ற டின்டின்



## செல்பேசியால் ஆபத்து!

விஜய்

6 ஆவது வருடத்தில்...

Rs. 25.00

## உரம் பயிருக்கு வரம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய தேவதைக்கு 'செவாலியர்' விருது





புருண்டியின் தேவதை (Angel of Burundi) என்று அழைக்கப்படும் மனித நேயமிக்கவரான மெகி பரன்கிட்ஸே (Maggy Barankitse) என்னும் அன்னைக்கு பிரான்ஸின் அதி உயர் விருதான 'செவாலியர்' விருது வழங்கப்படுகிறது. இவர் கடந்த பதினான்கு வருட காலத்தை யுத்தத்தாலும் எய்ட்ஸ் நோயாலும் பாதிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரம் அநாதைச் சிறுவர்களைப் பராமரிப்பதில் செலவிட்டுள்ளார்.

புருண்டியில் உள்ள பெண்கள் மற்றும் அநாதைச் சிறுவர்கள் தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு இவர் பெரும் பங்களிப்பையும் நல்கி வருகிறார். 1993 ஆம் ஆண்டு புருண்டி சிவில் யுத்தத்தின்போது உயிருக்குப் போராடிய 25 சிறுவர்களைக் காப்பாற்றியதையடுத்து இவரின் மனிதாபிமான நடவடிக்கைகள் பரவலாக ஆரம்பமாகின. அந்த வருடத்திலேயே இவர் அநாதைச் சிறுவர்களுக்கான இல்லமொன்றை ஆரம்பித்ததோடு இவரால் பராமரிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இவர் ஆரம்பித்த தர்ம ஸ்தாபனத்தின் பெயர் மெய்சன் சலோம். அதாவது சமாதான இல்லம் (House of Peace) என்பதாகும். தற்பொழுது நாடு முழுவதிலும் இவ்வாறான நான்கு சிறுவர் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமங்கள் முழுவதிலும் சிறுவர்களுக்கான இல்லங்களை அமைத்துள்ளார். இவருடைய தர்ம ஸ்தாபனத்தால் நூற்றுக் கணக்கான இல்லங்கள், மருத்துவமனைகள் போன்ற பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவர் தனக்குக் கிடைக்கும் கௌரவம் பற்றிக் குறிப்பிடுகையில், ''எனக்கு விருதுகள் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை.எனக்கு விருது வழங்குவதாக கூறப்படும் போதெல்லாம் நான் வியப்புக்குள்ளாகின்றேன். ஏனெனில், நான் சாதாரண வேலைகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறேன்'' என்று சிறிதும் பெருமையின்றிக் கூறுகிறார். இவருடைய அடுத்த திட்டமாக இருப்பது சிறுவர்களுக்கும் தமது தர்ம ஸ்தாபன ஊழியர்களுக்கும் கல்வி அறிவை வழங்கும் சர்வதேச பாடசாலையொன்றை ஆரம்பிப்பதாகும்.



இவர் ஆரம்பித்துள்ள சிறுவர் கிராமங்களிலுள்ள சிறுவர்கள் வீட்டுப்பராமரிப்பு, கால்நடைப்பண்ணை போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். உடல் ஆரோக்கியம் மற்றும் சிறு கைத்தொழில்கள் என்பவற்றிலும் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. பட்டினிச் சாவிலிருந்து இவர்களைக் காப்பாற்றும் நோக்கத்திலேயே இவர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

-ராஜா

# சொகலட் மலைகள்

பிலிப்பைன்ஸின் பொஹோல் தீவில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் சொகலட் மலைகள் காணப்படுகின்றன. பாரிய அளவிலான இந்த சொகலட் மலைகள் கூம்பு வடிவில் தோற்றமளிக்கின்றன. இவற்றை முதலில் பார்ப்பவர்கள் இவை எகிப்தின் பிரமிட்டுகளைப் போல் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை என்றுதான் நினைப்பார்கள்.ஆனால், உண்மையில் இவை இயற்கையாக அமைந்தவையாகும். இங்கு 1268 மலைகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. நேர்த்தியான முறையில் அமைந்திருக்கும் இம் மலைகள் 30 மீட்டருக்கும் 50 மீட்டருக்கும் இடைப்பட்ட உயரமுடையவை.

புற்களால் மூடப்பட்டுள்ள இம்மலைகள் வறட்சியான காலப்பகுதியில் சொகலட் (கடும் கபில நிறம்) நிறத்துக்கு மாற்றமடைகின்றன. இப்படி நிற மாற்றமடைவதனால் இவற்றுக்கு 'சொகலட் மலைகள்' என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது. ஏனைய காலப்பகுதிகளில் இவை பச்சையாகக் காட்சியளிக்கின்றன.





இந்த மலைகள் எவ்வாறு உருவாகின என்பது பற்றி பாரம்பரிய ரீதியில் கதையொன்றும் கூறப்பட்டு வருகிறது. அரோகோ என்னும் மிகவும் பலசாலியான இளம் அசுரன் ஒருவன் இருந்தான். இவன் அங்கு வாழ்ந்த அலோயா என்னும் இளம் பெண்ணை உயிருக்குயிராக நேசித்து வந்தான். ஆனால், அவள் அந்த அசுரனை மணம்முடிக்க விரும்பாமல் உண்ணா விரதம் இருந்து மாண்டு போனாள். அவளின் பிரிவைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் அசுரன் விம்மி விம்மி அழலானான். அவன் வடித்த கண்ணீர் மலைகளாக உருவெடுத்தன. அலோயா மீது அவன் வைத்திருந்த அன்பின் அடையாளமாகவே இந்த மலைகள் காணப்படுகின்றன.

இப்படி ஒரு கதை கூறப்படும் நிலையில் விஞ்ஞானிகள் வேறுவிதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சீதோஷ்ண மாற்றத்தின்போது கடலுக்கடியில் ஏற்பட்ட வெடிப்பினால் இந்த மலைகள் உருவாகியுள்ளதாக கூறுகின்றனர்.

இந்த மலைத்தொகுதிகளுக்கு அருகில் காணப்படும் 214 படிகட்டுகளைக் கொண்ட அவதானிப்பு மலையின் உச்சிக்கு ஏறிப் பார்த்தால் வெண்கல அறிவிப்புப் பலகையில் இதுபற்றிய விளக்கத்தை வாசிக்கக்கூடியதாக இருக்கும்.

-சீலன்

# A யிலிருந்து Z வரை மலர்கள்



Sunflower
சூரியகாந்தி



Spectabile
வண்ண வண்ண மலர்



Slipper orchid
பாந்துரப் பூ



Shoe flower
செம்பருத்தி



Saraca asoca
அசோக மரப்பூ



Showers of gold
திருக்கொன்றை



Starorchid
நட்சத்திர ஓர்கிட்



Salflower
நாகலிங்க மலர்



Tulip
டியூலிப்



Temple flower
அலரிப் பூ



Thema flower
கல்லித்தி மலர்



Thunbergia
ஐந்து இதழ் ஊதாமலர்

(மிகுதி அடுத்த இதழில்)

தொகுப்பு: ச.ஷியாம்தேவ், மந்தண்டாவளை, மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2007 க.பொ.த (சா/தர) பரீட்சையில்

# 7 பாடசாலைகளில் ஒருவரேனும் சித்தியடையவில்லை



2007 இல் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 7 பாடசாலைகளைச் சேர்ந்த சகல மாணவர்களும் ஒரு பாடத்திலேனும் சித்தியடையவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன்படி, அம்பலாங்கொடை ஸ்ரீ தர்மகுசல கனிஷ்ட வித்தியாலயம், மோதரவான-கெந்தல ஸ்ரீ ரோஹன கனிஷ்ட வித்தியாலயம், மத்தேகம-யடவர கனிஷ்ட வித்தியாலயம், கோனபொல சந்தி-தலகல கனிஷ்ட வித்தியாலயம், கும்புக்வெவ-ஹீபஹுவ மஹாபோதி வித்தியாலயம், பிபிலை-கனவெகல்ல கனிஷ்ட வித்தியாலயம், பொலன்னறுவை காலிங்கல முகாம் கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய 7 பாடசாலைகளிலிருந்தும் க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களுமே இவ்வாறு சகல பாடங்களிலும் சித்தி எய்தத் தவறியுள்ளனர் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# வெளிநாடுகளில் பணி புரிவோரின் பிள்ளைகளுக்கான நலன்புரிச்சேவை



வெளிநாடுகளில் பணி புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு விசேட நலன் புரிச் சேவைகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தமது பெற்றோர் வெளிநாடுகளில் பணிபுரிகின்றநிலையில், தற்சமயம் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் நன்மை கருதியும் அவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொடுக்கும் நோக்கத்துடனும் மேற்படி வேலைத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதோடு, அவர்களின் எதிர்காலத்தை சிறப்பானதாகக் கட்டியெழுப்புவதற்கும் இந்நலன் புரிச் சேவைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி நலன் புரிச் சேவையை முன்னெடுப்ப தற்கு வசதியாக வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங் களைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்பான விபரங்களை கல்வி அமைச்சு திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வருடாந்தம் கிடைக்கின்ற அந்நியச் செலாவணியில் மூன்றில் ஒரு பங்கு வெளிநாட்டில் தொழில்புரிவோரினாலேயே ஈட்டித் தரப்படுவதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, அவ்வாறான பெற் றோரின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் விசேட கவனம் செலுத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

# ஆறாவது ஆண்டில் எங்கள் மனதில்....

அன்பு 'விஜய்'வாசகர்களே,வணக்கம்!'விஜய்'யின் இன்றைய இதழுக்கு ஒரு சிறப்புண்டு. ஆம்! 'விஜய்' ஆறாவது ஆண்டில் கால்பதிப்பது இந்த இதழில்தான். 'கரம் கோர்த்தோம்-சிகரம் தொட்டோம்' என்பதற்கேற்ப 'விஜய்' தனது ஆறாவது வருடத்தில் கால் பதிப்பதற்கு வாசகர்களாகிய நீங்கள் எம்முடன் உறுதியாக கரம் பற்றியமையே காரணம் எனலாம்.

மாணவ பருவத்தினருக்குரிய தனித்துவமான பத்திரிகையொன்று இல்லாதிருந்த நிலையில், அத்தகையதொரு வெற்றிடம் இருப்பது இனங்காணப்படாத நிலையில், நமது 'விஜய நியூஸ்பேப்பர்ஸ்' நிறுவனத்தினர் அதனை சரிவர இனங்கண்டு, உரிய தருணத்தில் அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 'விஜய்' பத்திரிகையை வெளியிட்டனர். அன்று தொடக்கம் இன்று வரை 'விஜய்' பத்திரிகை தனித்துவம்மிக்க பத்திரிகையாக அமைந்திருக்கின்றது என்பது சமூகத்தில் பல மட்டத்தினரினதும் கருத்தாக அமைந்துள்ளது.'விஜய்' பத்திரிகை விற்பனையாகும் பிரதிகளின் எண்ணிக்கையும் இதனையே நிரூபித்துக் காட்டுகின்றது.

வாசிப்பினூடாக புதிய உலகத்துள் நுழைவதற்கு நமது பிள்ளைகளுக்கு பயனுள்ள விடயங்களைத் தரவேண்டும் என்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் பலதரப்பட்ட அம்சங்கள் உங்களுக்காக கோர்க்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றமையை நீங்கள் அறிவீர்கள்.

நமது இந்த வெற்றிப்பயணத்திற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், எழுத்தாளர்கள், மூத்தோர்கள், இதர புத்திஜீவிகள் என பலரும் பயனுள்ள ஆலோசனைகளை வழங்கி வருகின்றமையும் நினைவில் மீட்டத்தக்கதாகும். ஆனால், இதில் கவனிக்கத்தக்க விடயம் யாதெனில், நாம் வெறுமனே 'விஜய்'யின் வெற்றிப் பயணத்தில் மட்டும் திருப்திப்படுவதில் நிறைவைக் காண விரும்பவில்லை. ஏனெனில், வாசகர்களாகிய நீங்கள் அடைகின்ற வெற்றியே நமது வெற்றியாக அமையவேண்டும். அதுவே நமது இலக்காகும். அந்தவகையில் 'விஜய்' பத்திரிகை மீது நீங்கள் காட்டி வருகின்ற அபரிமிதமான ஆர்வம் அந்த வெற்றிக் கம்பத்தைக் காட்டி நிற்கின்றதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவ்வாறே, சிறந்த விமர்சனங்களையே நேர்த்தியான பாதைக்குரிய ஒளிவிளக்காக நாம் கருதுகின்றோம். அதன்படி, இதுவரை பலவழிகளிலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்ற நிறை-குறைகளின் உள்வாங்கல்களினை அடுத்தே திருப்திகரமான வெளிப்படுத்தலாக 'விஜய்' தனது ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளதென்பதும் மறுப்பதற்கில்லை.

கடந்து வந்த பாதையை விட கடக்க வேண்டிய பாதை நீளமானது. 'விஜய்' சாதிப்பதைவிட 'விஜய்' வாசகர்களாகிய நீங்கள் சாதிப்பதையே 'விஜய்'யின் சாதனையாக நாம் கருதுகின்றோம். எனவே பிள்ளைகளே, கடந்து வந்த பாதையில் நாம் வழங்கியவற்றை உள்வாங்கி, கிரகித்தது போலவே இனிவரும் காலங்களில் வழங்கப்படும் விடயங்கள் மூலம் நன்கு பயன் பெற்று உங்கள் எதிர்காலத்திற்கான அத்திவாரத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதற்குரிய பக்கபலமாக 'விஜய்' என்றும் இருக்கும்.

ஆகவே, நல்லதையே பார்ப்போம்; நல்லதையே கற்போம்; ஒழுக்கநெறி பேணி நற்பிரஜைகளாக வாழ்வோம். நாளைய உலகம் உங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றது. அதற்கு 'விஜய்' என்றும் உங்களுக்கு வழித்துணையாக இருக்கும்.

நன்றி.

அன்புடன்,

வி.ரெட்லி ஹெரிசன்

(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய அறிவியல் உலகம் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் மூலம் மிக உன்னதமான பிணைப்பை உலக மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது**



# செல்பேசியால் ஆபத்து!

கண்ணிமைக்கும் நேரத்தில் கடல் கடந்து பறக்கும் குரல் ஒலிகளின் ஒப்புயர்வற்ற செயல்பாடுகளுக்கு செல்பேசிகள் முக்கிய பங்காளியாகி விட்டன. காடுகள்,மேடுகள் எல்லாம் உழைத்துக் களைத்துப்போன ஏழை மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளிலும் சந்துபொந்துகளிலெல்லாம்



சந்தடியில்லாமல் நுழைந்து சாகஸம் படைத்து அவர் தம் வாழ்க்கைத் தொடர்பை வலுவாக்கி வருவதும் செல்பேசிகளே. செல்போன்களின் சேவைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கின்றன. 2005 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலகில் இதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 126 கோடியாக இருந்தது என்றும் அது, நாளொன்றுக்கு 46,000 பேர் வீதம் புதிதாக அதிகரித்து வருவதாகவும் கணக்கிட்டுள்ளனர்.

இதனால், பரவிவரும் செல்பேசிகளின் பயன்பாடுகள் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் கேடுகள் விளைவிக்கின்றன என்பதனை சமீபத்திய அறிவியல் ஆய்வுகள் தெளிவுபடுத்தி உள்ளன. இயற்கையான கதிர்வீச்சுகளிடையே அறிவியல் கண்டுபிடிப்புக்களாகிய வயர்லெஸ், ரேடியோ,டி.வி,ரேடார், செல்போன்கள் இவைகளின் இயக்கத்தால் வெளிவிடப்படும் ரேடியோ அலைகள்,கதிரியக்க அதிர்வுகள், நுண்ணலை அதிர்வுகள், நுண்ணலை கதிர்வீச்சுக்கள் போன்றவை உயிர்களின் மீது பல்வேறு தீயவிளைவுகளை உருவாக்கி வருகின்றன. இதில் இன்றைய செல்பேசிகளே அபரிமிதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.என்பதனை அறியமுடிகின்றது.

இதுபோலவே செல்பேசி கோபுரங்களும் மிகவும் ஆபத்தானவை. அவற்றிலிருந்து வரும் பாதுகாப்பற்ற நுண்ணலைக் கதிர்வீச்சுக்களில் சுமார் 60% தலைப்பகுதிகளில் கிரகிக்கப்பட்டு, மூளையினுள் ஊடுருவிச் செல்வதாக கண்டறிந்துள்ளனர்.

சிறு குழந்தைகள் செல்பேசிகளைப் பயன்படுத்துவது மிகவும் பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதனை 'பிரிட்டிஷ் தேசிய கதிரியக்க பாதுகாப்புக் கழகம்' தனது ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளது. பெரியவர்களை விட குழந்தைகளை கதிர் வீச்சுகள் அதிகமாகப் பாதிக்கின்றன என்றும், குழந்தைகளின் மண்டையோடுகள் மிகவும் மெல்லிய தன்மையுடையதாக இருப்பதால் அவை ஆபத்தான கதிர்வீச்சுகளினால் மிக எளிதாகப் பாதிக்கப்பட்டு 30-40 வயதிற்குள் பெரும்பாலானோருக்கு மூளைக்கட்டிகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

செல்பேசிகளின் தீயவிளைவுகள் பற்றி பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்களின் தீவிர ஆய்வுகளின் மூலம் பல உண்மைகள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 'ராப்பா போல்ட்' மருத்துவ அறிஞர்கள்' என்ற அமைப்பு செல்பேசி கதிர்வீச்சுக்களை விலங்குகளில் பரிசோதனை செய்ததில் அவற்றின் கண்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவதாக கண்டறிந்துள்ளனர். கண்களுக்கு அருகில் செல்பேசி கதிர்வீச்சு செல்லும்போது வெப்பநிலை சுமார் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிப்பதால் 'கண்புரை' நோய்கள் எளிதில் (Cataract) உருவாவதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்க அறிவியலறிஞர்கள் மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகளின் படி செல்பேசி பயன்படுத்துபவர்களில் அனேகமானோர் ஆண்மைக்குறைவு, விந்தணுக்குறைவு, மகப்பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு உள்ளாவதாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த மருத்துவ அறிஞர்களும் பல்வேறு ஆய்வுகள் மூலம் இதைத் தெளிவுபடுத்தியுள்ளனர். சாதாரண மனிதர்களைவிட நாள்தோறும் குறைந்தபட்சம் நான்கு மணிநேரம் செல்பேசிகளைப் பயன்படுத்துவோரின் விந்தணு எண்ணிக்கை 25% குறைவாகவே காணப்படுவதனை அறிவியல் ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

அமெரிக்க அறிவியலறிஞர்கள் மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகளின் படி செல்பேசி மின்காந்த கதிர்வீச்சுகளினால் அல்லது அதனால் ஏற்படுத்தப்படும் வெப்பத்தினால் பாதிக்கப்படுவதனைக் கண்டறிந்து வெளியிட்டார். செல்பேசிகளை இடுப்புப் பகுதியில் வைத்திருப்பவர்களின் அடிவயிறு, தொடையிணைப்பு பகுதிகள் எளிதில் சூடாவதும் இத்தகைய பாதிப்புக்களுக்கு காரணமாகும்.

மருத்துவரான பாங்லோ ரோஷினி என்பவரின் ஆய்வுகளும் செல்பேசி கதிர்வீச்சுகள் மூளையின் செல்களைத் தூண்டுகின்றன என்பதனை வெளிப்படுத்தியுள்ளன. இத்தகைய தூண்டுதல்கள் காக்கைவலிப்பு போன்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் தேசிய உழைப்பாளர் வாழ்வு மைய ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி 2000 மணி நேரத்துக்கு மேல் செல்பேசியைப் பயன்படுத்திய முதியவர்கள் மூளைப்புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை வெளிப்படுத்தியுள்ளனர். சாதாரணமாக செல்பேசி பயன்படுத்தாதவர்களைவிட3.7மடங்கு அதிகமாக செல்பேசி பயன்படுத்துவோர் பாதிக்கப்படுகின்றனர்.

லண்டன் புற்று நோய் ஆராய்ச்சி மையம்-மூன்று பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுடன் சேர்ந்து நான்கு ஆண்டுகளாக மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின் படி அதிகமாக செல்பேசியினைப் பயன்படுத்துவது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்குவிளைவிக்கின்றது.

எனவே, செல்பேசி பயன்படுத்துவோர் குழந்தைகளிடம் செல்பேசிகளை கொடுப்பதை தவிர்க்கவும்.

## செல்பேசி வைத்திருப்போர் கவனத்திற்கு....

**பேசும்போது உடலுக்கு சற்று தொலைவில் வைத்துப் பேசுவதும் வாய்ப்புக்கள் உள்ளபோது சாதாரண தொலைபேசிகளைப் பயன்படுத்துவதும் வாகனங்களில் செல்லும்போது கண்டிப்பாக செல்பேசித் தொடர்புகளைத் தவிர்ப்பதும் அதிகமாக சூடாகும்வரை பேசுவதைத் தவிர்ப்பதும் மிகவும் உகந்தது.**





ஜெ.டி.சோகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் முதலாவது....

## சுற்றுலாப் பயணி



டென்னிஸ் டிட்டோ (Dennis Tito) என்ற அமெரிக்க தொழிலதிபரே விண்வெளிக்குச் சென்ற முதலாவது சுற்றுலாப் பயணி ஆவார்.பூமியில் இருந்து விண்வெளிக்குச் சென்ற முதலாவது வீரர் ரஷ்ய நாட்டினரான யூரி ககாரினைப் போலவே இவரும் விண்வெளிக்குச் சென்ற முதலாவது சுற்றுலாப் பயணி என விண்வெளி வரலாற்றில் இடம் பெற்று விட்டார்.

1941 இல் பிறந்த இவருக்கு 60 வயதானபோது இவரது உடல்நிலையைக் காரணம் காட்டி, ஐக்கிய அமெரிக்கா இவரை விண்வெளிக்கு அனுப்ப மறுத்து விட்டது. பல ஆண்டுகள் 'நாஸா' நிறுவனத்தில் பொறியியலாளராகப் பணிபுரிந்த இவர் மனம் தளராமல் ரஷ்யாவை நாடி தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

இதற்காக இவர் ரஷ்யாவுக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கட்டணமாகச் செலுத்தினார். ரஷ்யா இவருக்கு ஆறு மாதங்கள் கடினமான பயிற்சிகளை வழங்கியதுடன் சோயுஸ் T-32 என்ற விண்கலத்தில் இரு ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இவரை விண்வெளிக்குஅனுப்பியது. ஒரு வாரம் அங்கு தங்கியிருந்த இவர், அங்கிருந்த சர்வதேச விண் வெளி நிலையத்திற்கும் சென்றார். இவரது பயணம் முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்தியது.

## விண்வெளி வீரர்

யூரி ககாரின் விண்வெளிக்கு வெற்றிகரமாகப் பயணித்த முதல் விண்வெளி வீரராவார். இவர் 1961 ஏப்ரல் 12 ஆம் திகதி சோவியத் ஒன்றியத்தின் வொஸ்டொக்-1 என்ற விண்கலத்தில் பயணித்து, சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார்.




1960 இல் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் சோவியத் விண்வெளித் திட்டத்தில் இணைந்து கொண்ட 20 விண்வெளி வீரர்களில் யூரி ககாரினும் ஒருவர். இவர்களுக்கு அங்கு உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் மிகவும் கடுமையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. கடும் பயிற்சிக்குப் பின்னர் ககாரின், கேர்மன் டீட்டோவ் ஆகிய இருவரும் விண்வெளிப் பயணத்திற்குத் தெரிவானார்கள். இவர்களில் ககாரின் விண்வெளிக்குப் பயணிக்கும் முதல் மனிதராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன்படி, ஏப்ரல் 12, 1961 இல் வொஸ்டொக்-1 என்ற விண்கலத்தில் பயணித்து, விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்ட ககாரின், விண்கலத்தில் முதன்முதல் பூமியை ஒருமுறை வலம் வந்தார். அவரது விண்கலம் 1 மணி 48 நிமிடங்கள் பறந்து, நீள்வட்டப் பாதையில் பூமியை வலம் வந்தது.

## விஞ்ஞான ஆய்வு செயற்கைக்கோள்



உலகின் முதலாவது விஞ்ஞான ஆய்வு செயற்கைக்கோள் எக்ஸ்ப்ளோரர்-1 என்பதாகும். இது 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அமெரிக்காவால் விண்ணுக்கு ஏவப்பட்டது. இதுவே அமெரிக்காவின் முதலாவது செயற்கைக்கோளாகும்.

ஆனால், உலகின் முதலாவது செயற்கைக் கோளை ரஷ்யாவே செலுத்தியிருந்தது. எக்ஸ்ப்ளோரர்-1 ஆனது அமெரிக்காவின் முதலாவது அறிவியல் ஆய்வு செயற்கைக்கோள் ஆகும். அதாவது, விஞ்ஞான ஆய்வு செயற்கைக்கோள் எனலாம். இதுதான் விண்வெளியில் உள்ள வேன் எலன் (Van Allen) ஒளிக்கதிர் பட்டையைக் கண்டுபிடித்தது.

## செயற்கைக்கோள்

'ஸ்புட்னிக்-1' பூமியின் சுற்றுப்பாதையில் மனிதனால் விண்ணுக்கு செலுத்தப்பட்ட முதலாவது செயற்கைக்கோள் ஆகும். இது 1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் 4 ஆம் திகதி



R-7 ரொக்கட் மூலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

இச்செயற்கைக்கோளின் நிறை 83 கிலோகிராம். இது இரண்டு வானொலி ஒலிபரப்பிகளைக் கொண்டிருந்தது. பூமிக்கு 250 கிலோமீற்றர் உயரத்தில் பூமியைச் சுற்றி வந்தது.

'ஸ்புட்னிக்-1' அனுப்பிய வானொலி சமிக்ஞைகளை ஆராய்ந்து, பூமியின் காற்று மண்டலத்தின் மேற்பகுதியைப் பற்றிய தகவல்கள் பெறப்பட்டன.

சோவியத் ஒன்றியத்தின் 'ஸ்புட்னிக்' திட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட பல்வேறு செயற்கைக்கோள்களில் இது முதலாவதாகும்.

விண்ணில் செலுத்தப்பட்ட இரண்டாது செயற்கைக்கோளான 'ஸ்புட்னிக்-2, லைக்கா என்ற நாயைச் சுமந்து சென்றது. அந்தவகையில் விலங்கொன்றை விண்வெளிக்குக் கொண்டு சென்ற முதலாவது செயற்கைக்கோள் என்ற பெருமையை இது பெற்றுள்ளது. 'ஸ்புட்னிக்-3' தோல்வியுற்றது. 1958 ஜனவரி 4 ஆம் திகதி 'ஸ்புட்னிக்-1 பூமியில் விழுந்தது.

## விண்கல் ஆய்வு

2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அன்று அமெரிக்கா அனுப்பிய 'நியர் ஷுமேக்கர்' என்ற செயற்கைக் கோள்,'ஈரோஸ்'என்ற விண்கல் மீது இறங்கிச் சாதனை படைத்தது. 'நியர்' என்பதன் முழு விரி வாக்கம் Near Earth Asteroid Rendezvos என்பதாகும். இதன் பொருள் 'பூமிக்கு அருகே உள்ள விண்கற்கள் பற்றிய ஆய்வு' என்பதாகும். விண்கல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஜீன் ஷுமேக்கர் என்பவரின் பெயரையும் சேர்த்து 'நியர் ஷுமேக்கர்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா 1,425 கோடி ரூபாய் செலவில் 'நியர் ஷுமேக்கர்' செயற்கைக் கோளைத் தயாரித்து, 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி 'ஈரோஸ்' விண்கல்லை ஆராய அனுப்பியது. செவ்வாய், வியாழன் ஆகிய கோள்களுக்கு இடையே ஆயிரக்கணக்கான விண்கற்கள் சுழல்கின்றன. அதில் ஒன்றுதான் 'ஈரோஸ்'. இந்த விண்கல் பூமியிலிருந்து 190 கோடி மைல் தூரத்தில் உள்ளது. இந்த விண்கல்லை நியர் செயற்கைக்கோள் 2000 ஆம் ஆண்டு அடைந்தது. சுமார் ஒரு வருடமளவில் ஈரோஸை சுற்றி வந்து 60 லட்சம் புகைப்படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பியது.

**60 DAY'S SPOKEN ENGLISH Course**
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

**BASIC/SPOKEN ENGLISH** அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

**DIPLOMA IN ENGLISH** தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.

60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்



FREE FREE T.SHART
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHART ஒன்று வழங்கப்படும்



இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணு தொழில்நுட்



நமது முன்னோர்களிடம் இருந்த பழக்கவழக்கங்கள் தற்போது வழக்கொழிந்து விட்டன. அவர்கள் தாம் உண்ணும் உணவை நன்கு அறிந்து உகந்த உணவை மட்டுமே உட்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. நவீன சந்தை முறைகள் இந்த மாற்றத்திற்கு காரணமாக உள்ளன.மரபணு மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்ட மனிதனின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் பல விடயங்களை இன்று சந்தைகளில் காணக்கூடியதாக உள்ளன. இவ்வாறான உணவு வகைகளும் மருந்து வகைகளும் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதகத்தையே ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த மரபணு தொழில்நுட்பம் பல நாடுகளில் சர்ச்சைக்குள்ளான விடயமாகவும் உள்ளது.

## உயிர் பல்வகைமை என்றால் என்ன?

இரண்டு உயிரினங்களுக்கு இடையிலான தொடர்பினால் புதிய சந்ததி ஒன்றினை உருவாக்க முடியுமாயின் இந்த வகை உயிரினங்களை ஒரே வகை உயிரினமாகக் கொள்ள முடியும்.

## உயிரினங்கள் வகைப்படுவது எதனால்?

உலகில் பல வகையான உயிரினங்கள் வசித்து வருகின்றன. உலகிலிருந்து பல காரணங்களினால் அழிந்து போன விலங்கினங்களும் உள்ளன.தமது சந்ததியினை தோற்றுவிப்பது உயிரினங்கள் கொண்டிருக் கும் விசேடமான இயல்பாகும். இதனைத் தவிர கீழே குறிப்பிடப்பட்டுள்ள இயல்புகளையும் கூறலாம்.

1. உயிர் பல்வகைமைக்கு ஏற்ப உயிரினத்தின் உடல் அமைப்புகள் மாறுபடுதல்.
2. நடத்தை முறைகள், இனப் பெருக்க நடவடிக்கைகள்.
3. உணவு முறைகள்.
4. குட்டிகளைப் பாதுகாக்கும் முறைகள்.
5. புத்தி மட்டம்.
6. சூழலை தகவமைக்கும் ஆற்றல்.
7. தூண்டுதல்களுக்கு துலங்கும் முறை.

## உயிரினங்களுக்கு தனிப்பட்ட இயல்புகள் உரித்தாவது எதனால்?

உயிரினங்களின் பரம்பரை அலகுகள் இனத்திற்கு இனம் வேறுபட்டு அமைந்துள்ளன. அவற்றின் குணவியல்புகள் பெற்றோரின் குணவியல்புகளை ஒத்தனவாக உள்ளன. இந்த இயல்புகள் இனங்களை வேறுபடுத்திப் பார்க்கும் வாய்ப்பினை அளிக்கின்றன. உதாரணமாக எலிகள் எலிக்குட்டிகளை ஈனுகின்றன. அவற்றின் குணவியல்புகள் ஏனைய உயிரினங்களை விட வித்தியாசப்பட்டிருக்கும். தாவர இனங்களுக்கும் இந்த விடயம் பொதுவானதாகும். ஓர் இனத்தின் குணவியல்புகள் பெற்றோர்களினால் அடுத்த சந்ததியினருக்கு கடத்தப்படுகின்றன.

## டி.என்.ஏ மூலக்கூறு

இந்த வகையில் டி.என்.ஏ என்பது ஒரு வகை ரசாயன அமிலமாகும். இதனை (Deoxyribo Nucleic Acid) என்று அழைப்பர். உயிரினங்களின் இயல்புகளைத் தீர்மானிப்பது இந்த மரபணுக்களாகும். இந்த மரபணுக்கள் டி.என்.ஏ க்களினால் உருவாகியுள்ளன. உயிரினத்தின் தரவுகள் அனைத்தும் இந்த டி.என்.ஏக்களில் சேகரிக்கப்பட்டுள்ளன.இந்த இயல்புகளை வெளிப்படுத்தும் புரோட்டின் ஒன்று கலங்களில் அமைந்துள்ளது. இந்தப் புரோட்டின்களை உருவாக்கும்தகவல்களை சேமித்துக்கொள்ளும் ரசாயனத் திரவமாக டி.என்.ஏ திகழ்கின்றது. டி.என்.ஏ மரபணுக்கள் இருக்கும் விசேட மரபணுக்கள் உள்ளன.

உயிரினத்தின் ஒரு கலத்தில் மட்டும் 45,000 மரபணுக்கள் உள்ளன. எனினும், இந்த எண்ணிக்கை மாறுபடவும் கூடும். இந்த மரபணுக்கள் எந்நேரமும் தொழிற்படுவதும் இல்லை. எனினும், இந்த மரபணுக்கள் அனைத்தினதும் ஒட்டுமொத்த செயற்பாட்டின் பலனாகவே உயிரினங்களின் இயக்கங்கள் நடைபெறுகின்றன.

## மரபணு தொழில்நுட்பம் எனப்படும் மரபணு மாற்றங்கள்

உயிரினங்களுக்கு தமது பெற்றோர்களின் குணவியல்புகள் கிடைக்கின்றன. உயிரினங்களின் குணவியல்புகளை மாற்ற வேண்டுமாயின் கலங்களில் உள்ள புரோட்டினை மாற்ற வேண்டும். புரோட்டினை மாற்ற வேண்டுமாயின் சேகரிக்கப்பட்டுள்ள மரபணுக்களை மாற்றவேண்டும். மரபணுக்கள் டி.என்.ஏ மரபணுக்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு டி.என்.ஏ மூலக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி புதிய உயிரினங்கள் உருவாக்கப்படுகின்றன. இதனையே நாம் 'மரபணு தொழில்நுட்பம்' என்கிறோம். இந்த தொழில்நுட்பத்தினால் தாவரத்திற்கு உள்ள குணவியல்புகளை விலங்குகளுக்கும் விலங்குகளுக்குரிய குணவியல்புகளை தாவரத்திற்கும் என்று மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

## மரபணு தொழிநுட்பத்தினால் புதிய இன உயிரினத்தை எவ்வாறு உருவாக்கலாம்?

புதிய இன உயிரினத்திற்கு எவ்வாறான குணவியல்புகள் உள்ளன என்பதனை முதலில் தீர்மானிக்க வேண்டும். பின்னர் அவ்வாறான இயல்புகள் கொண்ட உயிரினத்தினை அடையாளம் காணவேண்டும். பின்னர் இந்த இயல்புகளைப் புகுத்த பொருத்தமான உயிரினம் அடையாளம் காணப்படுகின்றது. பின்னர் மரபணு பிரித்தெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட உயிரினத்திற்குள் அந்த மரபணு உட்செலுத்தப்படுகின்றது. இவ்வாறு உருவாகும் உயிரினம் புதிய இயல்புகளைக் கொண்ட உயிரினமாக இருக்கும்.

## மரபணு தொழில்நுட்பத்தினால் உருவான வியப்பான படைப்புகள்

1972 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மரபணு தொழில்நுட்பம் இன்று உலகளாவிய ரீதியில் பரவியுள்ளது. இந்த புதிய தொழில்நுட்பத்தின் விளைவாக உருவான உருவாக்கங்களினால் மனிதனுக்கு நன்மையும் தீமையும் கலந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றுக்கு உதாரணங்கள் சில :

### 1. இன்சியுலின் ஹோர்மோன்

நீரிழிவு நோய்க்கு மாற்றாகக் கருதப்படும் 'இன்சியுலின் ஹோர்மோன்' மரபணு தொழில்நுட்பத்தின் பெரும் புரட்சியாகும். இதுவே மரபணு தொழில்நுட்பத்தின் முதல் உற்பத்தியாகும். இவ்வாறான மருந்துகள் உற்பத்தி மனித குலத்தின் இருப்புக்கு பேருதவியாக அமையும் என்று கருதப்படுகின்றது.

### 2. அரிசி உற்பத்தி

விற்றமின் A யை உருவாக்கும் தன்மை கொண்ட தங்க அரிசி (Golden Rice) மரபணு தொழில்நுட்பத்தின் பெறுபேறினால் உருவானதாகும். அமினோஅமிலம் மற்றும் விற்றமின்கள் அதிகளவில் நிறைந்துள்ளமை இந்த அரிசியின் விசேட அம்சமாகும். இது 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதுடன், நெல் விதை தங்க நிறம் கொண்டதாக இருப்பதால் 'தங்க அரிசி' என்று பெயர் பெற்றது. விற்றமின் A குறைபாடு கொண்டவர்களுக்கு சிறந்த மாற்று உணவாக இந்த அரிசி திகழ்கின்றது.



### 3. புதைக்கப்பட்டுள்ள குண்டுகளை அறிவதற்கு மரபணு தொழில்நுட்பம்

டென்மார்க் விஞ்ஞானிகள் நிலக்கண்ணி வெடிகளை அறிவதற்கு மரபணு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தாவரம் ஒன்றினை உருவாக்கியுள்ளனர். இந்த தாவரத்தின் வேர்கள் வெடிபொருளினை ஸ்பரிசித்தவுடன், தாவரம் சிவப்பு நிறமடைந்து விடும்.

### 4. கொலரா நோய்க்கு எதிரான உருளைக்கிழங்கு

கொலரா நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியினை



மரபணு தொழில்நுட்பத்தினால் இவ்வாறான விடயத்தினை மேற்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்பம் என்றால் என்ன?

ஏற்படுத்தக்கூடிய வகையில் உருளைக்கிழங்கு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தியை தூண்டக்கூடிய ஊசி மருந்துகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் என்பவற்றுக்கான செலவு ஏற்படுவதில்லை.

**5. விசேடமான பன்றிகள்**

மனித மற்றும் மாட்டு ஹோர்மோன் மரபணுவின் கலப்பினால் விசேடமான பன்றிகளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். பன்றிகளின் உடலில் கொழுப்பு அதிகமாக உள்ளதனால் பெரிய பன்றிகளை உருவாக்குவது இதன் நோக்கமாகும். எனினும் சில காலத்தின் பின்னர் விசேட பன்றிகளின் மூட்டுக்கள் வீக்கமடைந்து புற்றுநோய் கலங்கள் தோன்ற ஆரம்பித்தன. பின்னர் அவை குருட்டுத் தன்மையை அடைந்தன.

## பாதிப்பினை ஏற்படுத்தும் உற்பத்திகள்

✱ பூச்சிகளை அழிக்கும் விஷத்தினை வெளிப் படுத்தும் பெசிலஸ் துரின்ஜியோசிஸ்



எனப்படும் பக்றீரியாவினைப் பயன்படுத்தி சோயாபோஞ்சி, சோளம், மரமுந்திரி, தக்காளி போன்றவற்றினை உருவாக்குதல்.

✱ கடும் குளிருக்குத் தாக்குப்பிடிக்கும் 'ஹெலிபட்' மீனின் மரபணுவினைப் பயன்படுத்தி ஸ்ட்ரோபரி, தக்காளி உருவாக்குதல்.

✱ 'ரவுண்ட்அப்' போன்ற களைநாசனிகள் தாக்குப்பிடிக்கும் மரபணுக்களைப் பயன்படுத்தி சோயா, தக்காளி, சோளம், எண்ணெய், விதைகள், மரமுந்திரிகை, உருளைக்கிழங்கு போன்றவற்றினை உருவாக்குதல்.

✱ பூச்சிகளுக்கு விஷத் தக்காளி. இது பெசிலஸ் துரின்ஜியோசிஸ் எனப்படும் விஷத்தை உருவாக்கும் பக்றீரியாவிலிருந்து எடுக்கப்பட்ட மரபணுவினைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பயனாக இத்தக்காளியை உட்கொண்ட பூச்சிகள் மரணமடைந்தன. இதனால், பூச்சிகள் தக்காளி விளைச்சல்களை அழிக்கவோ, பாதிப்பினை ஏற்படுத்தவோ முன்வரவில்லை.

✱ தக்காளி கடும் குளிரினால் பாதிப்படைவதனால் இதற்கு தாக்குப் பிடிக்கும் தக்காளி இனம் உருவாக்கப்பட்டது. அதிக குளிரான பகுதியில் வாழும் 'ஹெலிபட்' மீனின் மரபணுவினைப் பயன்படுத்தி தக்காளி உருவாக்கப்பட்ட போதும், பல தோல்விகள் ஏற்பட்டன. பயிர் முற்றாத நிலை, காய் மென்மையாக இருந்தமை, அதன் வித்தியாசமான அமில சுவை என்பன அதனை வேறுபடுத்திக் காட்டியது.





எதிர்காலத்தில் இப்படியும் நடக்கலாம்

## மரபணு எப்படி உயிரினத்திற்குள் செலுத்தப்படுகின்றது?

மரபணுவானது தெரிவு செய்யப்பட்ட விலங்கின் மீது நேரடியாக செலுத்தப்படுகின்றது. அதற்கு 'ஜீன் கன்' (Gene gun) என்ற ஓர் உபகரணத்தினைப் பயன்படுத்தி மரபணுவினைச் செலுத்துவர். ஏனைய முறை பரப்பி ஒன்றினைப் பயன்படுத்திக் கொள்வதாகும். அதற்கு பக்றீரியா அல்லது வைரஸ் பயன்படுத்திக் கொள்ளப்படும். மரபணுவினை வைரசுக்குள் அல்லது பக்றீரியாவுக்குள் செலுத்தி அந்த பக்றீரியாவினை அல்லது வைரஸினை விலங்கின் உடலில் செலுத்துவர்.

## மரபணு தொழில்நுட்பத்தின் மோசமான விளைவுகள்

✱ மரபணு மாற்றத் திற்குள்ளான தாவரங்களும் விலங்குகளும் இயற்கை விலங்குகள் மற்றும் தாவரங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றன. இதனால், இயற்கையான முறையில் தோற்றம் பெற்ற உயிரினங்கள் அழிவினை எதிர்நோக்குகின்றன.

✱ பூச்சிகளைக் கொல்லும் இரசாயனத் திரவ உற்பத்தி களினால் இயற்கைக்கு அவசியமான பூச்சி வகைகள் மற்றும் வண்டுகள் என்பன அழிவை எதிர்நோக்குகின்றன.

✱ பூச்சிகளுக்கு எதிரான களைகளை உருவாக்குவதனால் டாவினின் பரிணாம தத்துவத்திற்கு ஏற்ப விஷம் கொண்ட களைகள் இயற்கையாக உருவாகும் வாய்ப்புகள் உள்ளன.

✱ மரபணு மாற்றம் பெற்ற உணவுகளை உட்கொள்வதனால் மனித உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியில் மாற்றம் ஏற்படுகின்றது.

## இலங்கையில் மரபணு தொழில்நுட்பம்

மரபணு தொழில்நுட்ப மருந்து வகைகள் மற்றும் உணவு வகைகளினால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதாக சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. அதனால் இலங்கையில் 2001 ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறி வித்தலில் மரபணு தொழில்நுட்பம் கொண்ட 21 உணவு வகைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இறக்கு மதியாகும் உணவு வகைகளில் மரபணு தொழில்நுட்பம் இல்லை என்று உறுதியளிக்கப்படும் விதிமுறை களும் உள்ளடக்கப்படும். எனினும், சொகலேட், பான வகைகள், உணவு சமைக்கும் எண்ணெய், மரபணு தொழில்நுட்ப மருந்துகள் இந்த தடைக்குட்படாது.

எனினும், உலக வர்த்தக அமைப்பு அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியூஸிலாந்து போன்ற நாடுகளின் அழுத்தத்தின் பேரில் இந்த தடையை 2001 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வெளியி டப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினால் காலவரையறை யின்றி ஒத்தி வைக்க நேர்ந்தது.

## மனிதனுக்கு நன்மை பயக்கும் மரபணு தொழில்நுட்பம்

✱ நீரிழிவு நோயாளிகளினால் பரவலாகப் பயன்படுத்தப்படும் 'இன்சியூலின்' உற்பத்தி.

✱ அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இன்டபெரோன் புரோட்டின் அதிகளவில் தயாரித்தல்.

✱ வயதான தோற்றத்தினை வெளிப்படுத்தும் மரபணு வகை யினை ரொட் தீவினைச் சேர்ந்த பிரவுன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் சிலர் கண்டுபிடித்துள்ளனர். இந்த மரபணுவின் செயற்பாட்டினை மேலும் அதிகரித்து இளமைத் தோற்றத்தினைப் பேணும் ரசாயனத் திரவத்தினை கொலராடோ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் சிலர் கண்டுபிடித்துள்ளனர்.

✱ புற்றுநோயை கண்டுபிடிக்க மரபணு தொழில்நுட்பத்தினைக் கண்டுபிடித்தல்.





✱ இருதய நோய்களுக்கு மரபணு சிகிச்சையினைப் பயன்படுத்தல்.

✱ பிள்ளைகளின் உண்மையான பெற்றோரினைக் கண்டுபிடிக்க மரபணு தொழில்நுட்பம் பயன்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த

# மிதிவண்டிப் பாவனை



உலகில் சனத்தொகை அதிகரித்துச் செல்வதுடன், பெருந்தெருக்களில் ஓடும் வாகனங்களின் தொகையும் விரைவாக அதிகரித்துச் செல்கின்றது. இது சூழல் மாசடைவதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இதனால், புவி வெப்பமும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. எமது சூழலைப் பாதுகாப்பதற்கு எத்தகைய முயற்சிகள், தீர்வுகள் எடுத்தபொழுதிலும் புவி வெப்பமடைவது குறைந்தபாடில்லை. இன்று இப்பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

எனினும் சூழல் முரண்பாடுகள் குறித்து அதிக அவதானத்தைச் செலுத்திய, இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள மக்களுக்கோ அதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதாவது புவி வெப்பமடைதலுக்கு புகை கக்கும் வாகனப் பாவனையும் ஒரு காரணம் எனக் கருதியமையால், மோட்டார் வாகனப் பாவனையைக் குறைத்து, மிதிவண்டியை போக்குவரத்துக்காகக் கையாள்வதற்கு அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தென் ஜகார்த்தாவில் தொழில்புரிவோர் அனைவரும் தாம் தொழிலுக்கு வரும்பொழுதும் தொழில் முடிந்து திரும்பும் பொழுதும் கட்டாயமாக மிதிவண்டியைப் பாவிக்க வேண்டும் என ஜகார்த்தா அதிகாரிகளால் கோரப்பட்டுள்ளனர். ''இதனைக் கட்டாயம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.



**'புவி வெப்பமடைதலுக்கு புகை கக்கும் வாகனப் பாவனையும் ஒரு காரணம் எனக் கருதியமையால், மோட்டார் வாகனப் பாவனையைக் குறைத்து, மிதிவண்டியை போக்குவரத்துக்காகக் கையாள்வதற்கு ஜகார்த்தா மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது'**

மிதிவண்டியைப் பாவிப்பதால் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருப்பதோடு, புவி வெப்பமடைதலும் குறைவடைய வாய்ப்பிருக்கின்றது. அத்தோடு, எமது மக்கள் நல்ல உடல் ஆரோக்கியத்திற்கும் உரிமையாளர்களாவர்கள்'' என ஜகார்த்தா நகரின் பேச்சாளரான அகமட் சொட்டார் தெரிவித்துள்ளார்.

இங்கு பெரும்பாலும் மிக ஒடுங்கிய பாதைகளே காணப்படுகின்றன. அதனால், மோட்டார் வாகனங்களை அதிகம் பாவிப்பதால் ஏற்படும் வாகன நெருக்கடிகளையும் இதன்மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதோடு, மக்களுக்கும் இலகுவாக தமது போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, தென் ஜகார்த்தாவில் 65 கிராமங்களிலிருந்து சுமார் 200 அதிகாரிகள் தொழிலுக்காக வரும்போது மிதிவண்டிகளையே பயன்படுத்துகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**இரஞ்சித் ஜெயகர்**

# உலகில் முதன்மையானவை

## முதலில் கொடியேந்தியவர்கள்





உலகில் முதன்முதலாக கொடி ஏந்தியவர்களும் கொடி ஏந்திப் போர்க்களத்திற்குச் சென்றவர்களும் பண்டைய எகிப்தியர்கள் தான். இவர்களது கொடி நீண்ட தடியில் தாவணியைச் சுற்றியது போல் நீளமான துணியாகத் தோற்றமளிக்கும். கொடியின் சின்னத்தை மரத்தில் செதுக்கி, அதனைத் தடியின் உச்சியில் வைத்திருந்தனர். அத்துடன், இவர்கள் காற்றில் பறக்காத கொடியையும் பயன் படுத்தியுள்ளனர்.

## முதல் இணையம் (Internet)

1969, செப்டெம்பர் 2 ஆம் திகதியன்றுதான் ஐக்கிய அமெரிக்காவின் கெலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் 'ரூட்டர்' என்ற இலத்திரனியல் ஆளி (சுவிட்ச்) மூலம் தொலைவில் உள்ள மற்றொரு கணினிக்கு செய்திகளை அனுப்பினார்கள்.




ஐக்கிய அமெரிக்காவின் ராணுவப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட முதல் இணைய வலைப்பின்னல் இதுவாகும். இதனை 'ARPANET' என்ற பெயரில் அழைக்கின்றனர்.

அமெரிக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகள் நிறுவனத்தின் கணினி வல்லுனர் கலாநிதி லிக்லைடர் தலைமையில் 1969 இல் உருவாக்கப்பட்ட ARPANET தான் இன்றைய இணைய வளர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்துள்ளது.

'இன்டர்நெட்-2' விரைவில் வரவுள்ளது. இது இப்போதைய இணைய வலைப்பின்னலை விட சுமார் ஆயிரம் மடங்கு வேகத்தில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிணாமம் தொடர்பான இன்னுமோர் ஆய்வு:

# 'கடல் கன்னி' போன்ற கண்டுபிடிப்பு

உலகில் உயிரினங்களின் தோற்றம் எப்போது ஆரம்பமாகியது என்பது தொடர்பாக இன்றுவரையில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இதில் பரிணாமம் பற்றிய கோட்பாடு ஒருவகையான தகவல்களைக் கூறுகின்றது. சார்ள்ஸ் டார்வின் 'பிகல்' என்ற கப்பலில் பிரயாணம் மேற்கொண்டபோது சேகரித்த உயிரினங்களின் எச்சங்களைக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் ஊடாக பரிணாமம் பற்றிய கோட்பாடு வெளியிடப்பட்டது. இதில் அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட மற்றொரு தகவலின்படி உயிரினங்கள் நீரில் இருந்தே தோற்றம் பெற்றிருக்கலாம் என்ற புதுமையான விடயம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இதற்கு ஆதாரமாக இருப்பது உலகில் 38 கோடி 30 லட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்பட்ட ஒரு மீன் பற்றிய ஆச்சரியப்படத்தக்க தகவல்களாகும். இந்த மீன் நீரிலும் கரையிலும் (தரை) வாழ்ந்திருக்கலாம் என்ற தகவலை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

## மீன்கள் நீரிலும் நிலத்திலும்




### கழுத்துடனான மீன்

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மீனின் படிமங்களுக்கு (எச்சம்) டிக்டாலிக் (Tictalic) என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. இந்த 'டிக்டாலிக்' என்ற மீன் கடலின் ஆழமற்ற அமைதியான பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்று ஆய்வை மேற்கொண்டு வரும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இந்த மீன் 3 அடிக்கு குறைவான நீளத்தை உடையதாக இருப்பதோடு, இதற்கு மனிதனுக்கு இருப்பது போன்று உணவை மென்று உண்ணக்கூடிய பற்களை உடைய சக்கைப் பகுதி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இதன் எலும்புக்கூட்டின் பகுதிகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள் இது முதல் ஆதி மனிதனின் எலும்புக் கூட்டுடன் ஒத்துப்போகக் கூடியதாக இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வை மேற்கொண்ட ஹவாட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் பெரிஸ் ஜெஸ்கிசாஸ் கருத்துத் தெரிவிக்கையில்:-

''நாங்கள் கழுத்துப் பகுதியைக் கொண்ட ஒரு மீனின் எலும்புக்கூட்டைக் கண்டுபிடித்தோம். இந்த மீன் நீரிலும் தரையிலும் வாழ்ந்த தற்குரிய தடயங்களுடன் உள்ளது. இது ஒரு அசாதாரண மீனினம் ஆகும். இதில் இருந்து உயிரினங்களின் பரம்பல் தொடர்பாகப் புதிய தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும்'' என்றார்.

### நான்கு கால்கள்

இந்த மீனின் எச்சப் பகுதிகளை ஆராய்ந்தபோது இதற்கு 4 கால்கள் இருந்தமை புலனாகின்றது. அதனால், நீரிலும் தரையிலும் இது வாழ்ந்திருக்கலாம் என்று ஊர்ஜிதம் செய்ய முடிகின்றது. மனித எலும்புக் கூட்டுடன் அதிகமாகத் தொடர்புபடும் வகையில் ஆதாரங்களை இந்த மீனின் எலும்புக் கூட்டுப் பகுதியில் அவதானிக்கமுடிவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் முன்னங்கால் பகுதி மீன் இனத்திற்கான உறவுக்கு அப்பால் சென்று, தரையில் வாழும் ஊர்வன போன்ற உயிரினத்தைக் காட்டுகின்றது. அது காலப்போக்கில் இரண்டு கைகளாகவும் மணிக்கட்டுப் பகுதியாகவும் பரிணாமம் அடைந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிவதாக 'பிலடெல்பியா' விஞ்ஞான ஆய்வு நிலைய ஆய்வாளர் பேராசிரியர் எட்வட் செஸ்கர் கூறுகின்றார். அந்த இறக்கைகள் போன்ற இரண்டு கைகளும் உடம்பின் பாரத்தைத் தாங்கக்கூடியதாக இருந்திருக்கின்றன.

அதன்படி இற்றைக்கு 38 கோடி 30 லட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த 'நியண்டர்தால்' ஆதிமனிதன் முதலையின் உருவத்தில் இருந்துதான் மனித உருவத்திற்கு பரிணாம வளர்ச்சியடைந்திருக்கலாம் என்ற தகவலை வழங்குகின்றது என்று கருத முடிகின்றது.

### அடிப்படைப் பண்புகள்



இந்த மீனின் எலும்புக்கூட்டை ஆராயும்போது மனிதனின் எலும்புக்கூட்டுப் பகுதியுடன் ஒப்பிட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அப்போது மனித எலும்புக்கூட்டின் சில பகுதிகளை எவ்வாறு அசைக்கமுடியுமோ அதேபோன்ற அசைவை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் இதன் முதுகெலும்புப் பகுதியையும் நன்கு அசைக்கக் கூடியதாக இருக்கின்றது என்றும் சாதாரணமாக பார்க்கின்றபோது கடல்கன்னியின் அமைப்பையும் இது ஒத்திருக்கலாம் என்று நம்ப முடிகின்றது. அதன்படி இந்த டிக்டாலிக்கின் எச்சங்களின் கண்டுபிடிப்பு எதிர்காலத்தில் இன்னும் பல தகவல்களைத் தரக்கூடியதாக இருக்கும் என்றும் பேராசிரியர் எட்வர்ட் கூறுகின்றார்.

எனினும், இவை வெறும் ஊகங்களாகவே அமைகின்றன. 'கடல்கன்னி' என்பது வெறும் கற்பனையே! என்பது மறுபுறமாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட விடயங்களாகும். ஆனாலும், எதையும் அலட்சியப் படுத்தமுடியாது. விஞ்ஞான ரீதியான அவதானத்தைச் செலுத்தி மேற்கொள்ளப்படும் ஆழமான ஆய்வுகளும் பரிசோதனைகளும் பல உண்மைகளை வெளிப்படுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சிகளாகும். ஏனெனில், உலகம் இறைவனால் படைக்கப்பட்டு அதில் உயிரினங்கள், நீர்நிலைகள் மற்றும் மலைகள் அனைத்தும் படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்ற நிலையில்தான் உலகில் உயிரினங்களின் தோற்றம் தொடர்பாக விஞ்ஞானிகளின் ஆய்வு முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கினியா

| | |
|---|---|
| தலைநகர் | : கோனக்ரி |
| பெரிய நகரம் | : கோனக்ரி |
| அரச கருமமொழி | : பிரெஞ்ச் |
| அரசு | : ராணுவ ஆட்சி |
| ஜனாதிபதி | : மாவுஸா டெடிஸ் கெமாரா |
| பிரதமர் | : கெபின் கொமாரா |
| மொத்த நிலப்பரப்பு | : 245,857 சதுர கிலோமீற்றர் |
| உத்தேச சனத்தொகை (2005) | : 10,211,437 |
| நாணயம் | : கினியன் ஃப்ரேங் |
| நேரம் | : கிரீன்வீச் நேரம் |
| இணையத்தளக் குறியீடு | : .gn |
| சர்வதேச தொலைத்தொடர்பு இலக்கம் | : +224 |





## அமைவிடம்

முற்காலத்தில் 'பிரெஞ்ச் கினியா' என அழைக்கப்பட்ட கினியா, ஆட்சிமுறையில் ஒரு குடியரசாகும். இது அரைநிலவைப் போன்ற தோற்றத்தையுடைய ஒரு மேற்கு ஆபிரிக்க நாடு. வடக்கில் கினியா பிஸோ,செனெகல் மற்றும் மாலி ஆகிய நாடுகளும் கிழக்கில் ஐவரிகோஸ்ட்டும் தெற்கில் சியெரா லியோன் மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளும் மேற்குப் புற எல்லை முழுவதும் அட்லாண்டிக் சமுத்திரமும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

## தரைத்தோற்றம்

7 நிர்வாக மாகாணங்களையும் 33 மாவட்டங்களையும் கொண்ட இந்நாடு, ஈரலிப்பும் வெப்பமும் கொண்ட காலநிலையை உடையது. ஆபிரிக்காவிலேயே மிக அதிக மழை வீழ்ச்சியைப் பெறும் நாடுகளில் ஒன்றாகவும் திகழ்கின்றது. ஈரலிப்பான கடற்கரைப் பிரதேசமும் மலைகள், சவன்னா புல்வெளிகள் மற்றும் அடர்ந்த காடுகளுடன் கூடிய உயர்நிலம் என்பன இதன் தரைத்தோற்ற அமைப்புகளாக விளங்குகின்றன.




## மக்களும் மதமும்

'புலானி' எனும் இனமே கினியாவின் பிரதான இனக்குழுவாக விளங்குகின்றது. தவிர, மெலிங், சுஸு மற்றும் பல்வேறு வகையான கோத்திரத்தார்களும் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இவர்களில் 85% ஆன பெரும்பான்மையோர் இஸ்லாமியர்களாகவும் ஏனையோர் கிறிஸ்தவர்களாகவும் உள்நாட்டு மத நம்பிக்கை கொண்டவர்களாகவும் திகழ்கின்றனர்.







## வரலாறு

இன்று கினியா என அழைக்கப்படும் இந்நாடு புராதன காலத்தில் பல பேரரசுகளின் ஒரு பகுதியாகத் திகழ்ந்தது. கி.பி 900 ஆம் ஆண்டளவில் சுஸு இன மக்கள் இப்பிரதேசத்தில் தமது குடியேற்றங்களை நிறுவ ஆரம்பித்தனர். 13 ஆம் நூற்றாண்டில் இந்த இன மக்கள் நாட்டின் பிரதான பகுதிகளில் குடியேறி, இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 20%மானோராக காணப்படுகின்றனர். 16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை 'புலானி' பேரரசு இந்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தியது.

1849 இல் பிரான்ஸ் நாடானது இதனை தனது பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசமென உரிமை கோரியதுடன், 1890 இல் பிரான்ஸ், இங்கு குடியேற்றங்களை உருவாக்கி, அதன் முதலாவது ஆள்பதியாக நொயெல் பெலே என்பவரை நியமித்தது. அதே காலகட்டத்தில் கோனக்ரி நகரை டொம்போ தீவிலிருந்து கண்டுபிடித்து அதனை குறித்த பிரதேசத்தின் தலைநகராக தெரிவு செய்தனர். பின்னர் 1895 இல் இந்நாடு, 'பிரான்சிய மேற்கு ஆபிரிக்கா' என பிரகடனப் படுத்தப்பட்டது.

1958 செப்டெம்பர் 28 ஆம் திகதி 'சார்ள்ஸ் டி கெவுல்' என்பவரின் வழிநடத்தலின்கீழ் பிரான்சின் தலைநகரில் நடந்த பொதுஜன அபிப்பிராயத்தின் மூலம் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, பிரான்சின் நான்காவது குடியரசாக கினியா நிறுவப்பட்டது. பின்னர் 1958 ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி கினியா சுயாட்சியுள்ள சுதந்திர நாடாக உருவாகியதுடன், அதன் முதலாவது ஜனாதிபதியாக செகௌ டௌர் தெரிவு செய்யப்பட்டார். 1984 இல் ராணுவப் புரட்சி மூலம் கேர்ணல் லன்சானா கோன்டே அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

## பொருளாதாரம்

விவசாய நாடாகக் கருதப்படும் கினியாவின் முக்கியமான விவசாய உற்பத்திப் பயிர்களாக நெல்,கோப்பி, அன்னாசி, மரவள்ளி, வாழை மற்றும் வற்றாளைக் கிழங்கு என்பன திகழ்கின்றன. உயர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் கோழி, ஆடு, செம்மறியாடு ஆகிய விலங்கு வேளாண்மை விவசாயத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

கினியாவின் பெரும் இயற்கை வளமாகக் காணப்படுவது 'பொக்சைட்' ஆகும். அது தவிர, தங்கம், வைரம், இரும்புருக்கு முதலிய உலோகங்களும் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றன. இந்த இயற்கை வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுகின்றனர். கோப்பியும் மீனும் இந்நாட்டின் முக்கிய இறக்குமதிப் பொருட்களாகக் காணப்படுகின்றன. பல்வேறு விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளது.

கினியாவின் முக்கிய வர்த்தகத் தொடர்பு நாடுகளாக ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், தென் கொரியா, ஸ்பெய்ன், பெல்ஜியம் ஆகிய நாடுகள் விளங்குகின்றன.







விரைவில்
புதியதொரு கோணத்தில்
நாடுகளைப் பற்றி
ஆராயவுள்ளோம்.
எதிர்பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப் பூங்கா




குழந்தையாய் நீயிருக்கையில் மண்டியிட்டு வாசித்தேன்;
தவழும்போது தாளமிட்டு வாசித்தேன்;
நடக்கும்போது நட்புடன் நேசித்தேன்;
ஆனால், இன்று உன்னையே சுவாசிக்கின்றேன்.
-ச.ஶ்ரீதேவி, உன்னஸ்கிரிய.

ப/சார்னியா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.
-ப/சார்னியா த.ம.வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

அனைவரினதும் உள்ளங்களைக் கவர்ந்த 'விஜய்'யே! எமது ஆக்கங்களை உன் பூங்காவனத்தில் மலரச் செய்து, பல்வேறு படைப்புகளை உருவாக்க வலுவேற்றி, எங்களை உயர்த்தி வைத்துள்ளாய். உன்னுடைய வளர்ச்சி சிறப்படைய வேண்டும் என இந்த நன்நாளில் வாழ்த்துகின்றேன்.
-எம்.எம்.எம்.அக்ரம், புத்தளம்.

இளம் எழுத்தாளர்களை ஊக்கமுடன் ஊக்குவிக்கும் 'விஜய்'யே, உன் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.
-ச.நஸீமா, திருகோணமலை.

'விஜய்'யே உன் பணி மேலும் தொடர என் குடும்பத்தோடு வாழ்த்துகின்றேன்.
-ஆர்.நிரோஜன், நோர்வூட்.

அறிவுக்கு விருந்தானாய்
என் தனிமைக்குத் துணையானாய்
பூவோடு சேர்ந்த நார்போல
உன்னோடு சேர்ந்த நானும்
அறிவைத் தேட முற்பட்டேன்
உனக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!
-பாத்திமா ஷிப்னா சிராஜ், றம்புக்கனை.

நீ வந்த நாள் தொட்டு இன்று வரை பல அறிவாளிகளை உருவாக்கியுள்ளாய். தொடர்ந்து பல விடயங்களைத் தாங்கி வந்து, எங்களுக்கும் பல சேவைகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
-எம்.ஏ.கே.இல்சான், பொத்துவில்.

அருமையாய்; அழகாய்
விண்ணோடு இணைந்தே
மண்ணின் தகவல்களையும்
அள்ளித்தந்த 'விஜய்'யே
தொடரட்டும் உன் தீரா சேவை...
-ருஸ்தா, ருஸ்னா, ஸஸ்னா, ஸஹ்றல் உட்பட தர்கா நகர் மு.ம.தே.பாடசாலை மாணவிகள்.

அல்லும் பகலும் பறந்து வந்தாய்
எங்கள் அறிவுக் கண்களைத் திறக்க வைத்தாய்
'விஜய்'க்கு என் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
-மோ.சுரம்ய, மாத்தளை.

உன் சுவைகளோ கோடி!
நீ எமக்களித்த பல விடயங்களை 6 வருடங்கள் சுவைத்து விட்டோம். இனியும் களைப்படையாமல் தந்திட வாழ்த்துகின்றேன்.
-எம்.எஸ்.எஃப்.ஸப்ரினா, காலி.

புது விடயங்கள் பலவற்றுடனும் விந்தையான விளக்கங்களுடனும் வீடு வந்து சேரும். உன்னை வாழ்த்துகின்றேன்.
-ந.கிருசாந்தன், அம்பாறை.

புதுப்புது விடயங்களோடு, புதுமை செய்யும் புகழுக்குரிய 'விஜய்'க்கு இனிமையான பிறந்தநாள் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் உரித்தாகட்டும்!
-ர.பத்மராஜனி, வெளிமடை.

அதிக அன்பினால் வாழ்த்துகின்றன பலகோடி உள்ளங்கள். நன்றி 'விஜய்'யே நீ தந்த சேவைக்கும் தரப்போகும் சேவைக்கும்.
-ஜே.இமானுவேல், வட்டவளை.

இந்த அறிவுப்பாதை முற்றுப் பெறாமல் நீடிக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.
-எம்.என்.எம்.சமீர், கண்டி.

ஆண்டாறும் போனாலென்ன,
நூறாண்டும் போனாலென்ன
உன்புகழ் என்றும் வாழியவே!
-க.டிலக்ஷன், வவுனியா.

சிறுவர்களான எங்கள் மனதைக் கவர்ந்த நீ மென்மேலும் வளர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.
-புவனா புண்ணியசீலன், எட்டியாந்தோட்டை.

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பாராட்டத்தக்கவை. அவை எங்கள் அனைவரையும் கவர்ந்தவை. உனது 6 ஆவது பிறந்தநாளில் நீ பல்லாண்டு காலம் வாழ நாம் வாழ்த்துகின்றோம்.
-சபியா ஹனீபா, ஹலீமா அஸீஸ்-அக்குறனை-6.

புதன்தோறும் புதுப்புது தகவல்களுடன் முத்தாக மலரும் 'விஜய்'யே! என் பொது அறிவு வளர துணையாக நின்ற உன்னை வாழ்த்துகின்றேன்.
-எம்.ஜே.அப்துல் பாசித், கொச்சிக்கடை.

அறிவுக்கு நண்பனாகி,
அறத்துக்கு நல்லாசானாகி,
மாணவ சமுதாயத்திற்கு வண்ணத் தமிழில்
நேய நெறி கூறி நிற்கின்ற 'விஜய்'யே நீ வாழ்க!
-ஜே.கே.நூருல் அஹ்லம், சில்மியாபுர.

உன் புதுமைகள் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. பல ஆண்டுகளில் காலடி வைத்திட எனது வாழ்த்துக்கள்.
-எம்.எம்.நஸ்ரி, வெலகம.

பாரினிலே பறைசாற்றும் விஜய்யே! என் சிரம் தாழ்ந்த வாழ்த்துக்கள் ஆயிரம்.....
-நவராஜா தக்ஷா, கந்தேகெதர.

(மிகுதி அடுத்த இதழில்...)

# மடிக்கணினிக்கு மவுசு அதிகம்



'டெஸ்க்டொப்' கணினி பாவனைகளை விட மடிக்கணினி (Laptop)களின் பாவனை தற்போது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. நினைத்த இடங்களில் இணையத்தள உபயோகம், பயணம் செய்யும் போதும் அலுவலக வேலைகளைப் பார்க்கும் வசதி, கண்ணைக் கவரும் பளிச்சிடும் வண்ணங்கள், எளிதாக தூக்கிச் செல்லும் வகையில் குறைவான எடை, நடுத்தர வகுப்பினரையும் கவரும் விலை, துல்லியமான திரை போன்றவை இந்த மடிக்கணினிகளின் சிறப்பம்சங்கள் ஆகும்.

அத்தியாவசியமான வசதிகளுடன் கூடிய மடிக்கணினிகள் இப்போது ஏராளமாக சந்தைக்கு வந்துள்ளன. ஒரு காலத்தில் அதன் விலையைக் கேட்டு ஆடிப்போனாலும் இன்று அதுவும் ஓரளவுக்குக் கட்டுப்படி விலைக்கு வந்துவிட்டது. 14 அங்குலம் முதல் 20 அங்குலம் வரையிலான திரைகளைத் தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கும் வசதியும் உள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொழில்நுட்பங்களையும் மென்பொருட்களையும் அவ்வப்போது உபயோகித்து இவற்றின் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

அலுவலக நிர்வாகிகள் மற்றும் தொழில் அதிபர்கள் மட்டுமே பயன்படுத்தி வந்த காலம் மாறி, இப்போது கல்லூரி மாணவர்களும் அதிக அளவில் இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். கடந்த 2008 ஆம் ஆண்டில், 'டெஸ்க்டொப்' கணினிகளை விட அதிக அளவில் இவை விற்பனையாகி உள்ளன. இந்த விற்பனை வளர்ச்சி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரமிட்டுப்

**பண்டைய காலம் தொட்டு மனிதன் உணவுக்காக பழங்களையும் காய்கறிகளையும் பயிரிட்டு வந்தான். நுகர்வுக்காக ஒன்றைப் பயிரிட்டு, அதன் விளைச்சல் சிறப்பாக அமைவதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உரிய வகையில் நீர் வளம் கிடைத்தல், சூரிய வெளிச்சம் கிடைத்தல், உரம் கிடைத்தல் என்பன அவற்றுள் முக்கியமானவையாகும். இந்த அடிப்படைக்காரணிகள் இருப்பின் விளைச்சல் சிறப்பானதாக இருக்கும். இங்கு நீர், சூரிய வெளிச்சம், மண்வளம் என்பன இயற்கையாக பயிர்களை சென்றடைகின்றன. இவைதவிர, செயற்கையாக நாம் பயன்படுத்துவது உரங்களையே ஆகும்.**

## உரம் ஏன் அவசியம்?

ஒரு விளைநிலத்தில் நீண்ட காலம் விளைச்சலில் ஈடுபடுதல், களைகள் வளர்தல், வெள்ளப்பெருக்கு, வறட்சி போன்ற எதிர்பாராத இயற்கை அழிவுகளினால் மண்ணில் உள்ள போஷணை வளங்கள் இழக்கப்படுகின்றன. இவ்வாறான நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதனூடாக உரிய பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே, மண்ணின் வளத்தினைப் பாதுகாக்கவும் அதிகரிக்கவும் அதனூடாக தாவரங்களின் செழிப்பான விளைச்சலுக்காகவும் உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

## விளைச்சலுக்கு அத்தியாவசியமான போசணைப் பதார்த்தங்கள்

விளைச்சலுக்கு அத்தியாவசியமான போசணைப் பதார்த்தங்கள் மூன்று உள்ளன. அவை; நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் என்பனவாகும்.இவைதவிர, தாவரம் ஒன்றுக்கு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டிய மேலதிக வளங்களும் உள்ளன. பயிர் வளர்ச்சிக்கும் சிறப்பான விளைச்சலுக்கும் அறுவடைக்கும் காபன் கலந்த, ரசாயனதிரவ உரங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். இங்கு பயிர்ச்செய்கையின்போது காபன் கலந்த உரங்களைப் பயன்படுத்துவது சிறந்தது. ஏனெனில், காபன் கலந்த உரங்கள் மண்ணுக்கு ஏற்றதாக இருப்பதோடு, தாவரங்களுக்கும் இதனால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

## காபன் கலந்த உரம்

காபன் கலந்த உரம் (காபன் உரம்) என்பது இயற்கைக் கழிவுகளாகும். சூழலிலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்த உரம் மண்ணுக்கு மிகவும் ஏற்றதாகும். தாவரங்களின் உக்கிய பகுதிகள், விலங்குகளின் கழிவுகள், விலங்குகளின் உக்கிய உடலங்கள் என்பனவற்றினைக் கொண்டு காபன் உரத்தினைத் தயாரித்துக் கொள்ள முடியும்.

## காபன் உரத்தின் முக்கியத்துவம்

காபன் உரத்தினால் மண்ணுக்கு மேலதிக போசணைப் பதார்த்தங்கள் கிடைக்கின்றன. மண்ணின் கட்டமைப்பும் தன்மையும் போஷிக்கப்படுகின்றது. மண் அதிக வளமானதாக மாற்றப்படுகின்றது. மண்ணின் ஈரலிப்பு பேணப்படுகின்றது. காபன் உரங்கள் மூலம் மண்ணில் சேரும் இயற்கைப் பொருட்களினால் மண்ணில் வசிக்கும் நுண்ணுயிர்களின் வளர்ச்சி அதிகரிக்கப்படுகின்றது. இவை பயிர்ச் செய்கைக்கு ஏற்றவையாகும்.

## பலதரப்பட்ட காபன் உரங்கள்

**இலை உரம்:**

இலகுவில் எவருக்கும் கிடைக்கும் உரமாகும். காய்ந்து சருகாகும் இலைகளை உரமாகப் பயன்படுத்த முடியும். அவற்றினை மண்ணுடன் கலந்து உக்கிப் போக இடமளிப்பதன் ஊடாக மண் வளம் பெறுகின்றது. மண் மீது இடப்படும் இலைகளினால் மண்ணின் வளத்தினைப் பெருக்கிக்கொள்ள இயலும். இங்கு சில தாவரங்களின் கிளைகளை பயிர்ச்செய்கைக்கு வேலிகளாக அமைக்கும் போது அவற்றின் இலைகள் விழுந்து இயல்பாகவே உரமாக மாறுகின்றன.

**விலங்கு உரம்:**

தெரிவு செய்யப்பட்ட விலங்குகளின் கழிவுகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த விலங்குகள் பெரும்பாலும் தாவர உண்ணிகளாகவே இருக்கும். இவற்றின் கழிவுகளை அகற்றாமல் உரங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்காக மாடு, ஆடு, கோழி ஆகியவற்றின் எச்சங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை விளைநிலங்களில் பயன்படுத்தும் முன்னர் நன்றாக உக்கியிருத்தல் அவசியமாகும். அதனை அடுத்து அவற்றினை பயிர்ச்செய்கைக்கான உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். கோழி உரத்தினைப் பயன்படுத்தும்பொழுது இது மூன்று நாட்கள் வரை உக்கிப் போவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அத்துடன், நாளாந்தம் விளைச்சலுக்கு நீர் பாய்ச்சுவதும் அவசியமாகும்.

## கொம்போஸ்ட் உரம்

விளைச்சலுக்கு அதிகமாகப் பயன்படும் உரமாக இது விளங்குகின்றது. நகரமயமாதலின் விளைவாக இயற்கை உர வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத பொழுது 'கொம்போஸ்ட்' உரம் தயாரித்துக் கொள்ளப்படுகின்றது. உக்கிப் போகும் தாவரங்களை சேகரித்து, அவற்றை நுண்ணுயிர்களின் தாக்கத்திற்குட்படுத்தியே 'கொம்போஸ்ட்' உரம் தயாரிக்கப்படுகின்றது. இது புதைத்து தயாரிக்கும் முறை, தரையில் தயாரிக்கும் முறை என்று இரு வகைப்படும். இதற்காக இலகுவில் உக்கும் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. சமையலறைக் கழிவுகள், தாவரப் பகுதிகள், விலங்குகளின் கழிவுகள் என்பனவற்றினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.



அனைத்தையும் சிறிய பகுதிகளாக்கி அதனுடன் மரத்தூள் சேர்க்கப்பட வேண்டும். விரைவில் உக்கிப்போகும் கடதாசிகளையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## கொம்போஸ்ட் தயாரிப்பு

வீடுகளில் விளைநிலத்திற்கென உரம்





உக்கும் தாவரப் பகுதிகள்



வைக்கோல், சாணி என்பனவற்றை சேர்த்தல்



கொம்போஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் பெறுவோம்



தயாரிக்கின்றீர்களாயின் 'கொம்போஸ்ட்' குழியொன்றினை உருவாக்கிக் கொள்ள முடியும். அதற்கென முதலில் ஒரு மீற்றர் அளவு ஆழத்திற்கு குழியொன்றினைத் தோண்ட வேண்டும்.

கொம்போஸ்ட், மரச்சாம்பல் மற்றும் சாணி என்பனவற்றை 3:1:1 என்ற அடிப்படையில் எடுத்து மாட்டின் சிறுநீர் அல்லது மனித சிறுநீரினைக் கொண்டு சரியாகக் கலக்க வேண்டும். அதன் பின் இலகுவில்

...னுடன் ...யில் உக் ...திக்

உக்கி விடும் தட்டுப்பகுதியொன்றினை உருவாக்க வேண்டும். இதனை 15 செ.மீற்றர் உயரத்திற்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குழியில் நீர், காற்றோட்டம் சரியாகக் கிடைக்க வேண்டும். மழைநீர் சேர்வதனைத் தடுக்க பொருத்தமான மூடியொன்றினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வறண்ட பகுதிகளுக்கு இந்த முறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

இதனைத் தவிர,தரையின் மீது அமைக்கப்படும் கொம்போஸ்ட் முறையும் சிறந்ததாகும். அதனை மூடிப் பாதுகாக்க களி மண், சாணிக்கலவை அல்லது பொலித்தீன் என்பனவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஈரலிப்பு இல்லாவிட்டால் நீர் சேர்த்து நன்கு கலக்கிக்கொள்ள வேண்டும். ஈரலிப்பு இருந்தால் மூலப்பொருட்கள் நன்கு உக்கிப்போகும். அதற்காக அதிகளவில் நீரைப் பயன்படுத்தவும் கூடாது. ஆரம்பம் முதல் எட்டு வாரங்களின் பின்னர் அனைத்துக் கழிவுகளும் உக்கிப் போன பின்னர் வளமான கொம்போஸ்ட் உரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு தயாரித்துக் கொள்ளப்பட்ட வளத்தினை பன்னிரண்டு வாரங்களுக்குள் விளை நிலத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கொம்போஸ்ட் உற்பத்தியும் தற்போது நவீனமயமாகியுள்ளது. அடிப்பாகம் நீக்கப்பட்ட பாத்திரத்தினை எடுத்து அதனை தரையில் அமிழ்த்தி, அதனுள் கழிவுகளை இடலாம். பாத்திரத்தில் சில துளைகளை இடவேண்டும். இதனால், கழிவுகளில் இருக்கும் நுண்ணுயிர்களுக்கு நன்கு காற்றோட்டம் கிடைக்கும். இதற்கு உரிய வகையில் ஈரலிப்பும் இருக்கவேண்டும். மூன்று வாரங்களின் பின்னர் பாத்திரத்தினை எடுத்து இந்த உரத்தினை பயன்படுத்திக்கொள்ள முடிவதுடன், தேவையான பொழுது மீண்டும் இதே முறையில் உரத்தினைத் தயாரித்துக்கொள்ளவும் முடியும்.

## ரசாயன உரம்

விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் ரசாயன உர வகைகள் பல உள்ளன. ஒரு ரசாயன உரத்தில் பயிருக்குத் தேவையான ஒரு போசணைப் பதார்த்தம் மட்டுமே உள்ளடங்கியிருக்கும். எனவே, பல ரசாயன உரங்களை ஒன்றாகக் கலப்பதனூடாகவே மேலதிக போசணைப் பதார்த்தங்கள் பயிருக்குக் கிடைக்கின்றன. இரண்டு முறையிலான ரசாயன உரப்பாவனைகள் உள்ளன. ஒன்று, அடிப்படைப் பாவனை. மற்றையது மேற்பரப்பில் விசுறுதல்.

## அடிப்படைப் பாவனை

பயிரினை நடுவதற்கு முன்னர் மண்ணில் உரத்தினைக் கலப்பதையே இம்முறை குறிக்கின்றது. இதன்போது நீரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. ரசாயன உரத்தினை காபன் உரத்துடன் கலந்து பயன்படுத்துவதனால் போசணைப் பதார்த்தங்கள் அதிக காலம் மண்ணில் நிலைத்திருக்கும்.

## மேற்பரப்பில் விசிறுதல்

பயிர் வளரும்போது மண் மீது உரத்தை விசிறுதலையே இம்முறை குறிக்கின்றது. உரத்துடன் நீர் சேர்க்கப்பட வேண்டும். காய்கறி விளைச்சலின்போது நைட்ரஜன் மற்றும் பொட்டாசியம் ஆகிய போசணைப் பதார்த்தங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## கவனத்திற்கொள்ள வேண்டியது

இவற்றில் ரசாயனக் கலப்பு உள்ளதால் சிறியளவிலேயே பயன்படுத்த வேண்டும். ஒரு ஹெக்டெயருக்கு 300-400 கி.கி ரசாயன உரம் போதுமானதாக இருக்கும். ரசாயன உரத்துடன் காபன் உரத்தினையும் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். ரசாயன உரத்தினால் மண்ணில் மாற்றங்களைச் செய்யமுடியாது. அதில் உயிரோட்டம் எதுவும் இல்லை. இதனால் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திரவ உரம்

இது இலகுவில் பயிருக்கு போசணையைப் பெற்றுக் கொடுக்கக்கூடியது. மண்ணின் அமிலத்தன்மையை அதிகரிக்காமல் பிரதான போசணைப் பதார்த்தங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். பயிர்களால் இலகுவில் உறிஞ்சிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. பயிர்களுக்கு புத்துயிரூட்டுவதோடு, மண்ணின் வளத்தினைப் பெருக்கும்.

திரவ உரம் விளைச்சலின்போது இரண்டு முறைகளில் பயன்படுத்தப்படுகின்றது. அம்முறைகளாவன; பயிரில் விசிறுவது, பயிரின் வேர்ப்பகுதிக்கு உரங்களை சேர்ப்பது. பயிர் மீது விசிறுவதனால் அதன் சகல பாகங்களும் உரத்தின் பயனைப் பெற்று விடும். இது பயிர் வளர்ச்சிக்கு சிறந்ததாகும். பயிரின் அடிப் பாகத்தில் சேர்ப்பதனால் வேர் பகுதிக்குப் போசணை எடுத்துச் செல்லப்படுகின்றது.

## திரவ உரத் தயாரிப்பு

கடல் தாவரங்கள், மீன்களின் கழிவு, வீட்டுக்கழிவு, சோயா போஞ்சி, புரதம், பொஸ்பேற், சாம்பல், விலங்குகளின் எலும்புகள் என்பனவற்றைப் பயன்படுத்தி திரவ உரம் தயாரிக்கப்படுகின்றது. தாவர வளர்ச்சிக்குத் தேவையான கனிப் பொருட்கள், விற்றமின்கள் அதிகளவில் உள்ள இந்த திரவ உரம் எதிர்காலத்தில் விவசாயத்துறையில் முக்கிய இடத்தினை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



திரவ உரம்



ஆடு மற்றும் கோழி உரம்



உயிரியல் வேலி முறை



கொம்போஸ்ட் அடிப்படையை சேர்த்தல்



மேற்பரப்பில் தயாராகும் கொம்போஸ்ட்



உரத்தினைக் கலத்தல்



தயாரித்து முடித்த கொம்போஸ்ட் உரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலத்தின் பலன்



அடர்ந்த காடு ஒன்றில் குள்ளநரி ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு நான்கு குட்டிகள். குட்டிகளை தாய் நரி மிகவும் அன்புடன் வளர்த்து வந்தது. அந்த நரி காடு பூராவும் சுற்றியலைந்து உணவு தேடி வந்து குட்டிகளுக்கு அன்புடன் கொடுக்கும்.

இந்த நான்கு குட்டிகளில் ஒன்று மட்டும் மிகவும் தன்னலம் கொண்டதாக இருந்தது. மற்றக் குட்டிகளை ஏமாற்றி விட்டுத் தான் மட்டுமே எல்லாவற்றையும் உண்ண வேண்டும் என்று நினைக்கும்.

ஒருநாள் அம்மா நரி, தீனியைக் கொண்டு வந்தது. குட்டிகளின் நடுவில் வைத்துவிட்டு மறுபடியும் உணவு தேடி வரச்சென்றுவிட்டது. தன்னலம் உடைய அந்த நரிக்குட்டி அதை அப்படியே கௌவிக்கொண்டு வெளியே ஓடியது. அந்த உணவில் பங்கு கேட்டு மற்ற மூன்று குட்டிகளும் அதன் பின்னால் ஓடி வந்தன. ஆனால், வேகமாக ஓடிய அதனை அவற்றால் பிடிக்க முடியவில்லை. அதனால் அவை தம் இருப்பிடத்திற்குத் திரும்பின.

முழுமையாகக் கிடைத்த உணவை விருப் பப்படி தின்ன ஆரம்பித்தது அந்தக் குட்டி நரி. அந்த உணவை மகிழ்ச்சியோடு தின்று கொண்டிருக் கையில் திடீரென்று சிறுத்தை ஒன்று அதன் மீது பாய்ந்தது. மற்றச் சகோதரர்களுக்கு கொடுக்காமல் நான் மட்டுமே இந்த உணவை முழுமை யாகத் தின்ன நினைத்ததற்கு இறைவன் எனக்கு சரியான பாடம் புகட்டிவிட்டான் என்று தன்னை நொந்தபடியே சிறுத்தைக்கு அது உணவாகி மாண்டது.

**எம்.டபிள்யூ.அம்தர் அஹ்மத்,**
**அறபா தேசிய பாடசாலை, வெலிகம.**




## விஞ்ஞான விளக்கங்கள்

மின்குமிழ்களில் சாதாரண வளி யின்றி குறைந்த அமுக்கத்தின் கீழ் 'ஆகன்' போன்ற வாயுவே நிரப்பப்பட் டிருக்கும்.

*# சூடாக்கப்பட்ட உலோக இழை, வளியுடன் தொடுகையுறும்போது தீப்பற் றும். ஆகன் வாயு சடத்துவ வாயுவாத லால் இழையுடன் எந்தத் தாக்கத்தையும் காட்டாது. மின்குமிழினுள் தாழ் அமுக்க வாயு காரணமாக வெப்பநிலை அதிகரிப் பது தடுக்கப்படுகிறது.*

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது இறங்குபவர் முன்னோக்கி சிறிது தூரம் ஓட வேண்டி யுள்ளது.

*#வாகனத்தின் வேகம் அவரது உடலி லும் இயக்கத்தை உண்டுபண்ணுகிறது. இறங்கும்போது அந்த இயக்கத்தின் வேகத்தைக் குறைக்காவிட்டால் விழ நேரிடும். எனவே, சிறிது தூரம் ஓடி வேகத்தைக் குறைக்க வேண்டியுள்ளது.*

சோடிய உலோகம் 'பரபின்' எனும் எண்ணெயிலிட்டு களஞ்சியப்படுத்தப் படும்.

*# சோடியம் வளியிலுள்ள ஒட்சிசனு டனும், நீராவியுடனும் மிக விரைவாகத் தாக்கம் புரியும். அதனால், ஆபத்தான விளைவுகள் ஏற்படும் ஆனால் சோடியம் 'பரபின்' எண்ணெயுடன் எதுவித தாக்க மும் புரிவதில்லை. இந்த 'பரபின்' எண்ணெயிலிட்டு வைப்பதால் சோடியம் நீருடனோ, வளியுடனோ தொடுகையுறுவது தடுக்கப்படுகிறது.*

**பாத்திமா நுஸ்ரத் நவாஸ்,**
**முஸ்லிம் பெண்கள் தே.பாட.,**
**தர்ஹா நகர்.**



## சமுத்திரமே....!

*நீள்வட்ட பூ போல*
*காட்சி தரும் சமுத்திரமே!*
*துள்ளியோடி வரும் உன்*
*அலையில்*
*களிப்போர்தான் எத்தனை பேர்!*

*உணவுக்கு சுவையூட்ட*
*உலகிற்கு உப்பளிக்கிறாய்!*
*நோய் தீர்க்கும் அருமருந்தாய்*
*அற்புதம் பல செய்கிறாய்!*

*சுறாவும் பராவும்*
*இறாலும் விராலும் என*
*வண்ண வண்ண மீன்களை*
*வகை வகையாய்*
*அள்ளித்தருகிறாய்!*

*ஆயிரமாயிரம் பணி ஆற்றிடும்*
*ஆழ்கடலே நீ*
*ஆண்டுகள் பல கடந்திடினும்*
*அழிவே இன்றி வாழ்ந்திடுவாய்!*

எம்.ஏ.எப்.அஸ்கியா,
மே/மினு/பாபுஸ்ஸலாம் ம.வித்.,
நாம்புளுவ. பஸ்யால.

## கடல் ஆமைகள்

ஆமைகள் மிகப் பழைமையான உயிரினங்க ளாகும். கடற்கரைகளில் 5 வகையான ஆமைகள் முட்டையிடுகின்றன. இலங்கையின் தென்பகுதி யினதும் மேற்குப் பகுதியினதும் கடற்கரைப் பிரதேசங்களிலும் Kasgoda, Bundala ஆகிய இடங்களின் கடற்கரைப் பிரதேசங்களிலும் இவ் வகையின ஆமைகள் முட்டையிடுகின்றன. பெண் ஆமைகள் கடற்கரை மண்ணில் சிறியளவு பள்ளங் களைத் தோண்டி முட்டையிடுகின்றன.

ஒவ்வொரு பள்ளத்திலும் 50-200 வரையான முட்டைகளை இடும். இந்த எண்ணிக்கைகள் இனத்திற்கு இனம் வேறுபடும். முட்டைகள் மண்ணால் மூடி விடப்படுகின்றன. முட்டைகள் பொரிக்கப்பட ஏறத்தாழ 8 வாரங்கள் எடுக்கும். இக்காலம் வெப்பநிலையைப் பொறுத்துக் குறையக்கூடியது. இடப்படும் முட்டைகளில் ஏறத்தாழ 85% குஞ்சு பொரிக்கக்கூடியவை.



குஞ்சுகள் பொதுவாக இரவு வேளைகளில் வெளிவந்து கடலை அடையும். இந்த ஆமைக் குஞ்சுகளில் பலவற்றை மீன்கள், பறவைகள் என்பன இரையாக்கிக் கொள்கின்றன. சில தப்பிப் பிழைக்கின்றன. அருகி வரும் கடல் ஆமைகளும் அவற்றின் முட்டைகளும் சட்டத் தால் பாதுகாக்கப்பட்டுள்ளன.

**வ.துவாரகா,**
**ஸ்ரீ சண்முக இ.ம.கல்., திருகோணமலை.**

## பூனையும் நரியும்

**பூனையும் நரியும் காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தன. நரியைப் பார்த்துப் பூனை, ''இங்கே எதிரிகள் வந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டது.**

**''எனக்கு ஆயிரம் தந்திரங்கள் தெரியும். ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவேன். எந்த ஆபத்தில் இருந்தும் தப்பித்துவிடுவேன்'' என்று பெருமையுடன் சொன்னது நரி.**

**இதைக் கேட்ட பூனை எனக்கு ஒரே ஒரு தந்திரந்தான் தெரியும். அது வெற்றிபெறாவிட்டால் நான் செத்தேன்'' என்றது. திடீரென்று வேட்டை நாய்கள் அவற்றைத் துரத்தத் தொடங்கின. பூனைக்குத் தெரிந்த ஒரே ஒரு தந்திரம் மரம் ஏறுவதுதான். உடனே அது அருகிலிருந்த பெரிய மரத்தில் ஏறியது. ஆனால், நரியோ தப்பிக்க எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவது என்று சிந்தித்தது. அதனால் எந்த முடிவுக்கும் உடனே வரமுடியவில்லை.**

**அதற்குள் வேட்டைநாய்கள் அதன் மீது பாய்ந்தன. தப்பிக்க வழியில்லாத நரி சிறிது நேரத்தில் அவற்றின் தாக்குதலுக்குள்ளாகி இறந்தது.**

ஏ.அப்துல்லா, தரம் - 7, க/மீரா சீ.சீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இ.விசோபன்,
தரம் - 11, இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



நளிபா மூபார்தீன்,
தரம் - 11B,
ப/முஸ்லிம் ம.வித்.,
வெளிமடை.



ப.நமனி, தரம் - 8A,
புனித கப்ரியல் ம.கல்.,
ஹட்டன்.



சி.சிந்துஜா, தரம் - 7,
சிலா/வடிவாம்பிகா
த.ம.வித்., முன்னேஸ்வரம்.

## நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்...

எதிர்வரும் ஏப்ரல் மாத இதழிலிருந்து 'விஜய்' கைவண்ணங்கள் பகுதியில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம். அதன்படி, நாம் கொடுக்கும் தலைப்புகளின் கீழ் உங்கள் கைவண்ணங்களை அனுப்பி வைக்கவேண்டும். கைவண்ணத்தின் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கற்கும் தரம், பாடசாலையின் பெயர், பாடசாலை அமைந்துள்ள இடம் என்பனவற்றை எழுதி அனுப்புங்கள். மேற்கூறிய விடயங்களை எழுதி அனுப்புகின்ற நேர்த்தியான, அழகான கைவண்ணங் களைப் பிரசுரித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்த 'விஜய்' காத்திருக்கின்றது.

### தலைப்பு

- ★ தரம் 1-5 - எனது பூந்தோட்டம் அல்லது எனது செல்லப்பிராணி
- ★ தரம் 6-8 - துணி அலங்காரம் அல்லது புதிய பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்
- ★ தரம் 9-11 - மீன்பிடிப்போர் அல்லது வயலில் வேலை செய்வோர்

கைவண்ணங்களை எதிர்வரும் **18.03.2009** இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.



நீர்கொழும்பைச் சேர்ந்த முஹமட் நிஸான்-பாத்திமா ஹஸானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் சஸ்னி, தனது ஐந்தாவது பிறந்தநாளை 03.03.2009 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கம்பளை, இல்லவதுறையைச் சேர்ந்த முஹம்மது ஹாபிஸ்-அஷ்ரபா தம்பதியரின் கனிஷ்ட புதல்வி பாத்திமா நூரா, தனது முதலாவது பிறந்த தினத்தை 13.03.2009 அன்று கொண்டாடவுள்ளார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.
(தகவல் : எச்.ஏ.ஷகூர்)




ஹம்பாந்தோட்டை, ஸாஹிரா பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழாவின்போது மாணவ, மாணவியர் நடனமாடுவதைப் படத்தில் காணலாம். (தகவல்:எம்.இர்பான் ஸகரியா-ஹம்பாந்தோட்டை)



கல்முனை, உதித்த ஹனீபா கல்லூரியின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா கல்லூரி அதிபர் என்.எம்.நெளசாத் தலைமையில் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் அரங்கேறிய 'மாணவர் உரையாடல்' நிகழ்வினையே படத்தில் காண்கிறீர்கள்.
(தகவல் : நிப்றாஸ் மன்சூர் - 'விஜய்' இளம் செய்தியாளர்)

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2499
எஃப்.சில்மியா,
தரம் - 6,
அல்-அஸ்ஹர் ம.கல்.,
திஹாரிய.



அங்.இல : 2500
அ.ஹஸ்னி,
தரம் - 5,
அல்-அமீன் வித்.,
காத்தான்குடி.



அங்.இல : 2501
நோ.மெலோஷி,
தரம் - 3,
தி/விவேகானந்தா கல்.,
உவர்மலை.



அங்.இல : 2502
மு.முஜாஹிட்,
தரம் - 7,
அல்-கமர் ம.கல்.,
பம்மன்ன.



அங்.இல : 2503
சி.அபிலாஸ்,
தரம் - 10,
தமிழ் ம.ம.வித்.,
வவுனியா.



அங்.இல : 2504
ஏ.பாஸித்,
தரம் - 8,
அல்-பலாஹ் மு.ம.வித்.,
கொச்சிக்கடை.



அங்.இல : 2505
எம்.ரிஸ்னி,
தரம் - 6,
ஹேந்தெனிய மு.வித்.,
கண்டி.



அங்.இல : 2506
த.சுமன்,
உயர்தரம்,
மெதடிஸ்த ம.கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2507
ச.நிருஜன்,
தரம் - 9,
ஆர்.கே.எம்.ஸாரத் வித்.,
திருகோணமலை.



அங்.இல : 2508
ஏ.சதீஷ்,
தரம் - 11,
இந்துக் கல்.,
புத்தளம்.



அங்.இல : 2509
யே.அலெக்ஸ்,
உயர்தரம்,
பட்டிருப்பு ம.ம.வித்.,
களுவாஞ்சிக்குடி.



அங்.இல : 2510
வி.தனேபர்,
தரம் - 11,
த.ம.வித்.,
புளியாவத்தை.



அங்.இல : 2511
அ.விதுஷன்,
தரம் - 7,
மன்/றோ.க.த.க.பாட.,
கொக்குப்படையாள்.



அங்.இல : 2512
எஸ்.தனேஸ்ராஜா,
உயர்தரம்,
ஜோன் பொஸ்கோ கல்.,
ஹட்டன்.



அங்.இல : 2513
எம்.பி.ஸபானா,
தரம் - 5,
பர்குசன் தே.பாட.,
இரத்தினபுரி.



அங்.இல : 2514
ஏ.ஜொனார்த்தனன்,
தரம் - 8,
பு.பேதுரு கல்.,
கொழும்பு-04.



அங்.இல : 2515
எஃப்.ருஷ்தா,
தரம் - 10,
ஸாஹிரா தே.பாட.,
அநுராதபுரம்.



அங்.இல : 2516
உ.உதயரூபன்,
உயர்தரம்,
மத்திய கல்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2517
சா.வேர்ஜினி,
தரம் - 8,
பு.கிளயர் ம.வித்.,
கொழும்பு-06.



அங்.இல : 2518
எம்.சிப்னான்,
தரம் - 11,
முஸ்லிம் ம.வித்.,
கலேவெல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் மல்லிகாவுக்கும் அண்ணாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

මල්ලිකා: අයියේ අද මහේෂ් ආවා.
அய்யே அத மகேஷ் ஆவா.
மல்லிகா: அண்ணா இன்று மகேஷ் வந்திருந்தார்.

අයියා: ආ.... එයා කීයටද ආවේ?
ஆ.... எயா கீயடத ஆவே?
அண்ணா: ஆ.... அவர் எத்தனை மணிக்கு வந்திருந்தார்?



මල්ලිකා: උදේ නවයට විතර ආවේ.
உதே நவயட விதற ஆவே.
மல்லிகா: காலை ஒன்பது மணியளவில் வந்தார்.

අයියා: මහේෂ් මොනවද කිව්වේ?
மகேஷ் மொனவத கிவ்வே?
அண்ணா: மகேஷ் என்ன சொன்னார்?

මල්ලිකා: හෙට ගම්පහ රැස්වීම තියෙනවා කිව්වා.
ஹெட கம்பஹ ரெஸ்வீம தியெனவா கிவ்வா.
மல்லிகா: நாளை கம்பஹவில் கூட்டம் இருப்பதாகச் சொன்னார்.

අයියා: කීයටද රැස්වීම පටන් ගන්නේ?
கீயடத ரெஸ்வீம படன் கண்ணே?
அண்ணா: எத்தனை மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கும்?



මල්ලිකා: උදේ දහයට කියලා කිව්වා.
உதே தஹயட கியளா கிவ்வா.
மல்லிகா: காலை பத்து மணிக்கு என்று சொன்னார்.

අයියා: ආ.... එහෙමද?
ஆ... எஹெமத?
அண்ணா: ஆ..... அப்படியா?

මල්ලිකා: ඔව්, උදේ හතට ගම්පහට දුම්රිය තියෙනවා කියලා කිව්වා. ඔයාට ස්ටේෂන් එකට එන්න කිව්වා.
ஒவ், உதே ஹதட கம்பஹட தும்ரிய தியெனவா கியலா கிவ்வா. ஒயாட ஸ்டேஷன் எகட என்ன கிவ்வா.
மல்லிகா: ஆம், காலை ஏழு மணிக்கு கம்பஹவிற்கு புகையிரதம் இருக்கிறது என்றார். உங்களை ஸ்டேஷனுக்கு வரச் சொன்னார்.

අයියා: හොඳයි, මම යන්නම්.
ஹொந்தய், மம யன்னம்.
அண்ணா: நல்லது, நான் போகின்றேன்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: இன்று மகேஷ் வந்திருந்தார்.
අද මහේෂ් ආවා.

i. அவர் எத்தனை மணிக்கு வந்திருந்தார்?
.................................................................................

ii. மகேஷ் என்ன சொன்னார்?
.................................................................................

iii. எத்தனை மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கும்?
.................................................................................






**Is** எனும் நிகழ்கால துணைவினைச் சொல்லுடன் (Present Tense Auxiliary Verb) நிகழ்கால எச்ச வினைச்சொல்லைக் (Present Participle) கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) He is reading.
அவன் வாசித்துக்கொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is he reading?
அவன் வாசித்துக்கொண்டு இருக்கின்றானா? (வினா)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் காணப்படுகின்ற 'is' எனும் துணை வினைச்சொல்லை மாத்திரம் அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறச் செய்கின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்ற மடைகின்றது. மேலும், உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) He is reading a book.
அவன் ஒரு புத்தகம் வாசித்துக்கொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is he reading a book?
அவன் ஒரு புத்தகம் வாசித்துக்கொண்டு இருக்கின்றானா? (வினா)

---

(அ) She is studying.
அவள் படித்துக்கொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is she studying?
அவள் படித்துக்கொண்டு இருக்கின்றாளா? (வினா)

(இ) She is studying English.
அவள் ஆங்கிலம் படித்துக்கொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is she studying English?
அவள் ஆங்கிலம் படித்துக்கொண்டு இருக்கின்றாளா?

---

(அ) It is sleeping.
அது உறங்கிக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is it sleeping?
அது உறங்கிக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

(இ) It is sleeping on the floor.
அது நிலத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஈ) Is it sleeping on the floor?
அது நிலத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

---

(அ) He is writing a letter.
அவன் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is he writing a letter?
அவன் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருக்கின்றானா? (வினா)

(அ) She is drawing a picture.
அவள் ஒரு படம் வரைந்துகொண்டு இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is she drawing a picture?
அவள் ஒரு படம் வரைந்துகொண்டு இருக்கின்றாளா? (வினா)

(அ) It is barking now.
அது இப்போது குரைத்துக்கொண்டு இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is it barking now?
அது இப்போது குரைத்துக்கொண்டு இருக்கின்றதா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# ஒபாமா-பிரவுன் சந்திப்பு



பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிரவுன் கடந்த 3 ஆம் திகதியன்று அமெரிக்காவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி ஒபாமா பதவியேற்ற பின்னர் பிரிட்டன் பிரதமர் பிரவுன் அவரை சந்திக்கும் முதலாவது சந்திப்பாக இது அமைந்தமை குறிப்பிடத் தக்கது. இரண்டு நாடுகளின் தலைவர்களும் நிகழ்காலத்தில் காணப்படுகின்ற உலகமயமாக்கல் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது உலக நாடுகள் முகம் கொடுத்து வருகின்ற பொருளாதார நெருக்கடிகள், எதிர்வரும் ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள பொருளாதார மாநாடு, ஆப்கான் பிரச்சினை உட்பட நடைபெறவுள்ள நேட்டோ அமைப்பின் 60 ஆவது மாநாடு ஆகியன குறித்தும் இரண்டு நாடுகளின் தலைவர்களும் மேற்படி சந்திப்பின்போது தீவிரமாக ஆராய்ந்துள்ளனர்.



# அரிசி ஆலைகள் ராணுவத்தின் கட்டுப்பாட்டில்...

வெனிசுவெலா நாட்டின் அனைத்து அரிசி ஆலைகளையும் ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருமாறு வெனிசுவெலாவின் ஜனாதிபதி ஹுகோ ஷாவேஸ் பணித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சில அரிசியை விற்பனை செய்ததன் காரணமாகவே ஜனாதிபதி ஷாவேஸ் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நெல் விற்பனையில் சிலர் அரச செயற்பாடுகளை மீறி வருவதாகவும் இவர்களை உரிய வகையில் கட்டுக்குள் கொண்டு வந்தால் மாத்திரமே அரிசி விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் இந்த கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்களின் நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்படும் என்றும் ஷாவேஸ் மேலும் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சியில் நிகழ்ந்த விசேட உரையொன்றின்போதே ஷாவேஸ் மேற்படி கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# நீளமான நகங்கள் விபத்தில் நொருங்கின

உலகிலேயே நீளமான கைவிரல் நகங்களைக் கொண்டவர் என்ற கின்னஸ்



சாதனைக்கு உரித்துடையவர் அந்த சாதனைக்குரிய தனது நகங்களை விபத்தின் காரணமாக இழக்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு ஆளாகியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த லீ ரெட்மன்ட் என்ற பெண்ணுக்கே இந்த நிலைமை ஏற்பட்டது. இவரது நகங்களின் மொத்த நீளம் 28 அடியாக இருந்த அதேவேளை, வலது கைவிரலின் நகமே கூடிய நீளத்தைக் கொண்டதாக இருந்துள்ளது. இது 2 அடி 11 அங்குல நீளத்தைக் கொண்டிருந்தது.1979 ஆம் ஆண்டிற்கு பின்னர் இவர் தனது நகங்களை வெட்டவே இல்லையாம். இதன் காரணமாகவே கின்னஸ் சாதனை ஏட்டிலும் இவரது பெயர் பதியப்பட்டது.

இவ்வாறு சாதனைக்குரிய நகங்களை கொண்ட லீ ரெட்மன்ட் அண்மையில் வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென விபத்தில் சிக்கினார். இதனால், வாகனத்திலிருந்து அவர் வெளியே தூக்கி எறியப்பட்டார். தெய்வாதீனமாக அவருக்கு பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் அவர் பொக்கிஷமாகக் காத்து வந்த சில விரல்களின் நகங்கள் மட்டும் உடைந்து போய்விட்டன. மிகுதி நகங்களையும் மருத்துவ சிகிச்சையின்போது நீக்கி விட வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது.

# தாய் முத்தமிட்டு உயிரிழந்த சிசு



பிறந்து பதினொரு நாட்களே கடந்திருந்த சிசுவொன்று தனது தாயின் முத்தத்தின் காரணமாக பரிதாபகரமாக உயிரிழக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியது.

பிரிட்டனைச் சேர்ந்த ருத் என்ற 35 வயது பெண்ணொருவருக்கு பிறந்த பெண் குழந்தையே இவ்வாறு இறந்துள்ளது.

குழந்தை பிரசவமாவதற்கு சில தினங்களுக்கு முன்னர், கர்ப்பிணியாக இருந்த இந்தப் பெண்ணின் வாயில் புண் ஏற்பட்டிருந்தமையால் அதற்கான மருத்துவ சிகிச்சைகளை அவர் பெற்றிருந்தார். இதன் பின்னர் சில தினங்களிலேயே குறித்த குழந்தை பிரசவித்துள்ளது. அதன்போது தாயார் தனது குழந்தை



மீது ஏற்பட்ட பாச மேலீட்டால் குழந்தைக்கு முத்தமழை பொழிந்துள்ளார். ஆனால், பரிதாபம்! பிரசவத்துக்கு முன்னர் அந்த தாயாரின் வாயில் ஏற்பட்டிருந்த புண்ணிலிருந்த வைரஸ் கிருமிகள் முழுமையாக அழிவுற்றிராத நிலையில், முத்தமிடலின் காரணமாக அவை குழந்தைக்கும் தொற்றிவிட்டன. இதன் பிரதிபலிப்பாக அந்த சிசு தொடர்ச்சியாக நித்திரையில் இருந்து பதினொராவது நாள் மரணமாகியது.

**அற்லஸ் கேள்வி - 194**

**கேள்வி:** நீளமான நகங்களைக் கொண்டிருந்த கின்னஸ் சாதனைப் பெண்ணின் பெயர் என்ன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 194,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 192 இன் சரியான விடை: 79 ஆயிரம் கோடி டொலர்**

பரிசு பெறுவோர்

எம்.ஹக்கீம்,
508/1 A இனிகல, கட்டுகஸ்தோட்டை,
கண்டி.

சி.நேருஜன்,
30/2, உடையார் வீதி, கல்முனை-02.

மொஹமட் ராஜா,
17/B, நாகவில்லு, பாலாவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்திரக் கதைகளில் தோன்றி, பல வீர சாகசங்கள் புரியும் கதாநாயகர்களுக்கு ரசிகர்களிடத்தில் பலத்த வரவேற்புண்டு. அந்தவகையில் அநீதிகளுக்கெதிராக குரல் கொடுக்கும்-உலகின் பல நாடுகளுக்குச் சென்று வீர சாகசங்கள் புரிந்து -அங்குள்ள குற்றவாளிகளைக் களையும் உலகப் புகழ் பெற்ற டின்டின் (Tintin) பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.**




# நீல் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு முன்னரே நிலவுக்குச் சென்ற டின்டின்





## யார் இந்த டின்டின்?

இன்றைய புனைகதைகள், திரைப் படங்கள், சித்திரக்கதைகளில் அதன் நாயகன் அதீத சக்தி கொண்ட விசித்திர ஆற்றல்களுடையவனாகவே சித்தரிக் கப்படுகின்றான். இவற்றின் மூலம் கதா நாயகன் என்றால் அவன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்கின்ற கற்பனை நம்முள் விதைக் கப்பட்டு விட்டது.

ஆனால்,பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த 'ஜோர்ஜஸ் ரெமி' என்பவரால் 'ஹேர்ஜ்' எனும் புனைபெயரில் உருவாக் கப்பட்ட இந்த டின்டின் கதாபாத்திரம் எம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதனாகவே விளங்குகின்றது. அநியாயத்தையும் அக்கிரமங்களையும் புரியும் குற்றவாளிகளை எதிர்க்கும் ஓர் ஊடகவியலாளராகவே டின்டின் சித்தரிக்கப் படுகின்றார். தனது நாட்டிலும் தான் பயணிக்கும் வேறு நாடுகளிலும் சந்திக்கும் குற்றவாளிகளையும் விசித்திர மனிதர்களையும் சம்பவங்களையும் டின்டின் எவ்வாறு சமாளிக்கின்றான் என்பதுதான் கதை.

## ஏனைய கதாபாத்திரங்கள்

டின்டின் தொடரில் மொத்தம் 24 கதைகள் உள்ளன. இவற்றில் ஆரம்பம் முதலே 'டின்டின்' உடன் எப்போதும் கூட வரும் வெண்ணிற நாய்க்குட்டி ஸ்னோவி (Snowy), கெப்டன் ஹெடொக் (Captain Haddock), விஞ்ஞானி கெல்கியூலஸ் (Professor Calculus), தொம்ப்சன் சகோதரர் (The Thompsons) போன்ற பல்வேறுபட்ட மகிழ்வூட் டக்கூடியதும் கதைக்கு சுவையூட் டக்கூடியதுமான கதாபாத்திரங்களும் உள்ளன.

## சில முக்கிய கதைகள்

'டெஸ்டினேஷன் மூன்' (Destination Moon), 'டின்டின் ஒன் த மூன்' (Tintin on the Moon) ஆகிய கதைகள் Tintin தொடரில் மிக முக்கியமானவை. 1969 இல் நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் கால்பதிக்கும் முன்னரே நிலவுப் பயணத்தை பற்றிக் கதையமைத்திருந்தார் ஹேர்ஜ். இதன் ஒரு கதையில் நிலவுக்கு செல்லும் 'ரொக்கெட்'டின் வடிவம், அதன் உள் அம்சங்கள், தொழில் நுட்பம் போன்றவற்றை நேர்த்தியாகக் காட்டியிருந்ததோடு, இக்கதையை அவர் மிக விறுவிறுப்பா கவும் நகர்த்தியி ருந்தார்.

இவை தவிர, டின்டின் இன்கா பயணம், Tintin in Tibet, Tintin and the Picaros, Tintin in America, The Blue Lotus போன்ற கதை களில் அந்தந்த நாட்டின் தனித்துவங்கள் சிறப்பாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே Flight 714 எனும்கதையில் ஒரு செல்வந்தருடன் எதிர் பாராதவிதமாக விமானத்தில் பறக்கும் டின்டின் உட்பட ஹெடொக், கெல்கியூலஸ் போன்றோர் கடத்தப்பட்டு, ஒரு வில்லனின் தீவுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அங்கு அடைத்து வைக்கப்படும் டின்டின் உட்பட ஏனையோரும் ஒரு வேற்றுக்கிரகவாசியால் காப்பாற்றப்படுகின்றனர். இவ்வாறு பல்வேறு வித்தியாசமான, சுவாரஸ்யமான கதைகளை உள்ளடக்கியதாக டின்டின் தொடர் எழுதப்பட்டுள்ளது.



## வரலாறு

டின்டின் கதாபாத்திரம் ஹேர்ஜின் மனதில் உருவா வதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் 'போல் ஹோல்ட்' எனும் சாரணி ஆவார். டென்மார்க்கைச் சேர்ந்த இவர் 1928 இல் தனது 16 ஆவது வயதில் பிரசித்தி பெற்ற விஞ்ஞானப் புனைகதை பேச்சாளரான யூல்ஸ் வேர்னின் பிறந்தநாளை முன்னிட்டு உலகத்தைச் சுற்றி ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டிருந்தார். இவர் தனது சுற்றுப் பயணத்தின்போது ரஷ்யாவின் மொஸ்கோவிலுள்ள செஞ்சதுக் கத்தில் எடுத் துக்கொண்ட புகைப்படத்தை அடிப்படை யாகவைத்தே டின்டின் எனும் கதாபாத்திரத்தை ஹேர்ஜ் உருவாக் கியுள்ளார். போல் ஹோல்ட் தனது பயணத்தை முடித்து, மீண்டும் கொபன் ஹேகன் புகை யிரத நிலை யத்தை வந்த டையும்போது அங்கு பெரும் திரளானோர் கூடி நின்று அவரை வர வேற்றனர். அதனைப் பிரதிபலிப்பதா கவே டின்டின் தனது முதலாவது சாக சத்தை முடித்து திரும்பும்போது அவரை மக்கள் வரவேற்கும் கதையும் படமும் அமைந்திருந்தன.

'டின்டின் இன் முதலாவது கதை 1929 ஜனவரி 10ஆம் திகதி 'ரோமன் கெத்தலிக் பிரசல்ஸ்' எனும் வார சஞ்சிகையின் இணைப்பாக வெளியானது. இக்கதையில் டின்டின் ரஷ்யப் பயணம் ஒன்றை மேற் கொள்வதாக எழுதப்பட்டிருந்தது. அன்றி லிருந்து தனது இறுதிக்காலம் வரை ஹேர்ஜ் 24 கதைகளை எழுதியிருந்தார். இக்கதைகள் 50 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தன. அத்தோடு, 200 மில்லியன் பிரதிகள் விற்பனை யாகியிருந்தன. 1983 இல் ஹேர்ஜ் மரணித்ததன் பின்னர் டின்டின் கதைகளை வேறு எவரும் தொடர்ந்து எழுதுவதை ஹேர்ஜ்ஜின் மனைவி விரும்ப வில்லை.

## இன்று டின்டின்

கடந்த ஜனவரியில் 'டின்டின்' இன் 80 ஆவது பிறந்ததினம் (1929-2009) கொண்டாடப்பட்டது. இது மாத்திரமல்லாது பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸ் மற்றும் லக்ஸம்பேர்க் புகையிரத நிலையங்களில் டின்டின் இன் பாரிய சுவர் ஓவிய மொன்று திரைநீக்கம் செய்து காட்சிக்கு வைக்கப்பட்டது.

அத்துடன் இவ்வருட ஜூன் மாதமளவில் பிரான்சின் சாஸ்திரிய நிபுணர் கிறிஸ்டியன் நெபோர்சம், ஹேர்ஜ் அவர்களை நினைவுகூருமுகமாக ஓர் அருங் காட்சியகத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளார்.

## வெள்ளித்திரையில் டின்டின்

இதேவேளை, Dream works நிறுவனமும் Lord of the rings திரைப்பட இயக்குனர் பீட்டர் ஜெக்சனும் ஹேர்ஜின் மனைவி யுடன் செய்து கொண்ட ஒப்பந்த மொன்றின் அடிப்படையில் டின்டின் கதைத்தொடர் திரைப் படமாகவும் தயா ரிக்கப்படவுள்ளது. முதலாவது டின்டின் திரைப் படம் அடுத்த வருடம் திரையி டப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.



ஜோர்ஜஸ் ரெமி

**ஜே.பீ.ஏ. விபாகர்**



புகையிரத நிலையத்திலுள்ள சுவரோவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழகி வசிலீசா

ரஷ்ய நாட்டுக்கதை 02



நெருப்பு வாங்குவதற்கு சூனியக்காரி பாபா-யகாவிடம் போகுமாறு மாற்றாந்தாயின் மகள்மார் அனுப்பியதையடுத்து வசிலீசா நடுங்கி கண்ணீர் சிந்தி தனது பையில் உள்ள பொம்மையை வெளியில் எடுத்தாள். "ஓ! என் அருமை சிறிய பொம்மையே, "நெருப்பு வாங்கிவர அவர்கள் என்னை பாபா-யகாவிடம் அனுப்புகிறார்கள். அந்த பாபா-யகா எலும்புகள் நறநறக்க ஆட்களை விழுங்குபவள்"

"நீ கவலைப்படாதே" என்று பொம்மை பதிலளித்தது. "நீ நன்றாக இருப்பாய். நான் உன்னுடன் இருக்கின்ற வரை உனக்கு எந்தத் தீங்கும் நேராது"

"எனக்கு ஆறுதல் சொல்வதற்காக மிக்க நன்றி, பொம்மையே" என்று கூறிய வசிலீசா புறப்பட்டுச் சென்றாள். அவளைச் சுற்றிலும் காடு ஒரு சுவர் போல எழுந்திருந்தது. பிரகாசமான

வேலிக்கு மகுடமிட்டிருந்த மண்டையோடுகளின் கண்கள் ஒளிரத் தொடங்கி, இரவைப் பகல் போல வெளிச்சமாக்கியது. வசிலீசா அச்சத்தால் நடுங்கினாள். அவளால் பாதங்களை அசைக்க முடியவில்லை. தரையோடு தரையாக உறைந்து போனது போலாயிற்று. அந்தப் பயங்கரமான இடத்திலிருந்து அவளால் நகர முடியவில்லை

வளர்பிறை நிலவோ, நட்சத்திரம் மின்னுவதோ உயரே வானில் காணப்படவில்லை. நடுங்கியவாறும் சிறிய பொம்மையை நெருக்கமாக அணைத்தவாறும் வசிலீசா நடந்து சென்றாள்.

திடீரென்று குதிரையில் விரைந்து சென்று கொண்டிருந்த ஒருவனைப் பார்த்தாள். அவனது ஆடைகள் வெண்ணிறத்திலும் குதிரை வெண்ணிறத்திலும் இருந்தன.வெள்ளியாலான சேணமானது இருட்டில் வெள்ளையாகப் பளிச்சிட்டது. அப்போது பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வசிலீசா தள்ளாடவும் தடுமாறவும் செய்தாள். வேர்களிலும் அடிக்கட்டைகளிலும் இடித்துக்கொண்டாள். அவளது நீண்ட சடையில் பனித்துளிகள் மின்னின, அவளது கைகள் குளிர்ந்து விறைத்துப் போய்விட்டன.

திடீரென்று மற்றொரு குதிரைக்காரன் பாய்ச்சலில் வந்தான். அவன் சிவப்பு நிற உடையில் இருந்தான். அவனது குதிரை சிவப்பு நிறம், குதிரையினுடைய சேணமும் சிவப்பு நிறத்தில் இருந்தது. சூரியன் உயரே எழுந்து வசிலீசாவை முத்தமிட்டு, வெதுவெதுப்பூட்டி, பின்னலில் இருந்த பனியை உலர வைத்தது.



வசிலீசா நிற்காமல் நாள் முழுக்க நடந்தாள். அந்தி சாய்கின்ற நேரத்தில் ஒரு வெட்டவெளியை அடைந்தாள்.

அதைச்சுற்றிலும் பார்த்தபோது அங்கே குடிசை ஒன்று இருப்பதைக் கண்டாள். குடிசையைச் சுற்றி இருந்த வேலியானது மனித எலும்புகளால் ஆக்கப்பட்டு உச்சிகளில் மனித மண்டையோடுகளைக் கொண்டிருந்தது. கடவையாக மனிதக் கால்களே இருந்தன, தாழ்ப்பாழ்களாக மனிதக் கைகளே இருந்தன. பூட்டாக கூர்மையான பற்களே இருந்தன.

வசிலீசா துடுக்குற்று அப்படியே திகைத்துப் போய்விட்டாள். திடீரென்று குதிரையில் ஒருவன் சவாரி செய்து கொண்டு வந்தான். கறுப்பு உடை அணிந்திருந்தான். குதிரையும் கறுப்பு நிறம், அதன் சேணமும் கறுப்பு நிறம், குதிரைக்காரன் வாசல் வரை சவாரியில் வந்து காற்றாய்க் கரைவது போல மறைந்து போனான். இரவு வந்தது. அவ்வளவுதான்! வேலிக்கு மகுடமிட்டிருந்த மண்டையோடுகளின் கண்கள் ஒளிரத் தொடங்கி, இரவைப் பகல் போல வெளிச்சமாக்கியது. வசிலீசா அச்சத்தால் நடுங்கினாள். அவளால் பாதங்களை அசைக்க முடியவில்லை. தரையோடு தரையாக உறைந்து போனது போலாயிற்று. அந்தப் பயங்கரமான இடத்திலிருந்து அவளால் நகர முடியவில்லை. அந்நேரத்தில் பூமி நடுங்குவதையும் தனக்குக் கீழாகக் குலுங்குவதையும் உணர்ந்தாள். பாபா-யகா ஓர் உரலில் அமர்ந்து பறந்தபடி, உலக்கையை ஒரு சாட்டை போல வீசிக்கொண்டும் ஒரு துடைப்பத்தால் வழித்தடத்தைப் பெருக்கிக்கொண்டும் வந்தாள். கடவை வரை பறந்து வந்த அவள் காற்றை மோப்பம் பிடித்துவிட்டுக் கத்தினாள்,

" மாமிச வாடை அடிக்கிறது! யார் இங்கே?"

பாபா-யகாவின் முன்னே வந்து தாழ் பணிந்து மிகவும் பணிவுடன் வசிலீசா சொன்னாள், "நான்தான் வசிலீசா, பாட்டி. உன்னிடம் நெருப்புக் கேட்பதற்காக என் மாற்றாந்தாய்ச் சகோதரிகள் என்னை அனுப்பினார்கள்"

"ஓ, நீயா?" பாபா-யகா பதிலளித்தாள். "உன்னுடைய மாற்றாந்தாய் என் உறவுக்காரி. நல்லது. சற்று நேரம் என்னிடம் தங்கி வேலை பார். பிறகு என்ன செய்வதென்று நாம் பார்ப்போம்" அவள் உரக்கக் கத்தினாள்.

"திறந்து கொள்ளுங்கள். என்னுடைய வலிமையான தாழ்ப்பாள்களே! திறந்து கொள், எனது அகலமான கடவையே" கடவை அகலத் திறந்துகொண்டது. பாபா-யகா தனது உரலில் இருந்து உள்ளே வந்தாள். அவளுக்குப் பின்னே வசிலீசாவும் நடந்து உள்ளே வந்தாள். கடவையில் வளர்ந்து நின்ற ஒரு பிர்ச் மரம் தனது கிளைகளால் வசிலீசாவை விளாச முயன்றது.

"பிர்ச் மரமே, இவளைத் தொடாதே, நான்தான் இவளை உள்ளே கூட்டி வந்தேன்" என்றாள் பாபா-யகா. அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அங்கே கதவருகே படுத்திருந்த நாய் ஒன்று வசிலீசாவைக் கடிக்க வந்தது.

"இவளைத் தொடாதே. நான்தான் இவளை உள்ளே கூட்டிவந்தேன்" என்றாள் பாபா-யகா.

அவர்கள் வீட்டிற்குள்ளாக வந்த போது நடைபாதையில் கிடந்த கிழட்டு முறுமுறுப்பான பூனை ஒன்று வசிலீசாவை பிறாண்ட வந்தது. "இவளைத் தொடாதே. கிழட்டு முறுமுறுப்பான பூனையே, நான்தான் இவளை உள்ளே கூட்டிவந்தேன்" என்றாள் பாபா-யகா.

"வசிலீசா, என்னிடமிருந்து ஓடிப் போவது அவ்வளவு சுலபமானதன்று. என்னுடைய பூனை உன்னை பிறாண்டும், என் நாய் உன்னைக் கடிக்கும். என் பிர்ச் மரம் உன்னை விளாசும், உன் கண்களைப் பிடுங்கும். மேலும் என்னுடைய கடவை உன்னை வெளியே விடாது" என்று கூறியபடி பாபா-யகா தனது அறைக்குள் சென்றாள்.

(தொடரும்....)

# காகத்திடம் கண்ட நற்குணம்



அப்பா வாங்கி வந்த இரண்டு மாம்பழங்களையும் கையில் எடுத்து வைத்துக்கொண்டு யாருக்கும் தரமாட்டேன் என்று அடம் பிடித்து அழுது கொண்டிருந்தாள் பொன்னி. அம்மா எவ்வளவோ சமாதானம் கூறியும் கேட்கவில்லை. "இரண்டு பழங்களும் எனக்குத்தான்" என்று சொல்லிக்கொண்டே வீட்டின் கொல்லைப் புறத்தில் இருந்த கிணற்றடியில் உட்கார்ந்து பழங்களை சாப்பிடத் தயாரானாள்.

அதைப் பார்த்த அம்மாவுக்குச் சரியான கோபம். இருந்தாலும் பொறுத்துக்கொண்டு, பழம் கிடைக்காமல் அழுது கொண்டிருந்த பொன்னியின் அண்ணன் நவீனை சமாதானப்படுத்தினாள். தன் தங்கையின் கையில் இருந்த மாம்பழங்களை நவீன் ஏக்கமாகப் பார்த்துக் கொண்டு இருந்தான். பொன்னி ஒரு பழத்தை தன் மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டு, இன்னொரு பழத்தை சிறு துண்டுகளாக வெட்டி சாப்பிட ஆரம்பித்தாள்.



அப்போது ஒரு காகம் அவள் அருகே வந்து உட்கார்ந்து பழத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தது. ஒரு கையில் பழத்தைப் பிடித்துக்கொண்டு காகத்தை விரட்டினாள் பொன்னி. காகமோ அந்த இடத்தை விட்டு நகராமல் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் மனம் இரங்கிய பொன்னி.... ஒரு துண்டை எடுத்து காகத்தை நோக்கி வீசினாள்.

காகம் அதைக் கௌவிக்கொண்டு பறந்து சென்று, ஒரு மரத்தின் மேல் அமர்ந்து கொண்டு, "கா....கா......கா......" என்று எல்லாக் காகங்களையும் அழைக்கத் தொடங்கியது. மற்றக் காகங்கள் வரும் முன் பழத்துண்டை, சிறுசிறு துண்டுகளாக்கியது. எல்லாக் காகங்களும் பழத்துண்டுகளைப் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தன.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த பொன்னியின் கண்கள் குளமாகின. காகத்திடம் உள்ள நல்லகுணம் கூட என்னிடம் இல்லாமல் போய்விட்டதே என்று வருந்தினாள். தன் தவறை உணர்ந்து மனம் திருந்தியவள், தன்னிடம் இருந்த பழங்களை அம்மாவிடம் கொடுத்து, வீட்டில் இருக்கும் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்குமாறு கூறி ஆனந்தமாகச் சிரித்தாள். நவீனும் சந்தோசமாக பொன்னியை பாராட்டி மகிழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டியாளர்களுக்கான ஒழுக்கப்பண்புகள்

**விளையாட்டுத்துறை என்பது நட்பின் அடையாளமாகவே கருதப்படுகின்றது. அதன் காரணமாகவே உலக நாடுகளும் ஒவ்வொரு நாடுகளுக்கிடையே போட்டிகளில் ஈடுபடுகின்றன. இதன்மூலம் தமது நட்புறவை மேம்படுத்த முடியும் என்பதே இதன் நோக்கமாகும். ஆனால், அண்மைக்காலமாக இந்த நோக்கம் பழுதுபட்டிருப்பதாகவே கருதப்படுகின்றது.**

அந்தவகையில் விளையாட்டு வீரர்கள்கூட விளையாட்டிற்குரிய ஒழுக்கப்பண்புகளை கடைப்பிடிப்பதிலிருந்து தூர விலகியிருப்பதையே காணமுடிகின்றது. இவ்வாறு அவர்கள் நடந்து கொள்கின்றமையானது அவர்கள் தம்மையே அகௌரவப்படுத்திக் கொள்வதுடன், விளையாட்டுத் துறையிலிருந்தே ஒதுக்கப்படுகின்றவர்களாகவும் அமைந்து விடுகின்றனர். கஷ்டப்பட்டு, பயிற்சி பெற்று, மிகுந்த ஈடுபாட்டுடன் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்று பின்னர் ஒழுக்கப் பண்புகளை மீறும் சந்தர்ப்பங்களில் அவை அனைத்தும் வீணடிக்கப்பட்டு செல்லாக்காசு என்ற நிலைக்கு ஆளாவது மிகுந்த வேதனைக்குரிய விடயமே.

ஆனால், ஒழுக்கப் பண்புள்ள போட்டியாளரின் திறமைகள் உச்ச அளவிற்கு வளர்ச்சி காணும். இத்தகையவர்களிடத்தில் எதிர் அணி போட்டியாளர்களும் மதிப்பும் கௌரவமும் கொள்வதுடன்,அவர்களின் புகழும் ஓங்கி நிற்கும். இதனால், போட்டியாளரின் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.மாறாக, பண்பற்ற முறையில் விதிமுறைகளுக்கு மாறாக போட்டியிடும் ஒருவருக்கு அவருடைய மனதில் எப்போதும் அந்த குற்ற உணர்வே காணப்படும். இதன்போது, அவரால் மனம் திறந்த அளவில் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியை ஈட்ட முடியாமல் இருக்கும்.

எனவே, போட்டியாளர் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கப் பண்புகள் எவை என்பதை தெளிவுபடுத்தி விளக்குவதற்கான சில விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

## சட்டதிட்டங்களுக்கு ஏற்ப விளையாடுதல்

எந்தவொரு போட்டியுமே அந்தப் போட்டியின் தன்மைக்கேற்ப விதிமுறைகளை, சட்டதிட்டங்களைக் கொண்டிருக்கும். காலத்திற்குக் காலம் இந்த சட்டதிட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் அதற்கேற்ப அவற்றை மீறாமல், மதித்து விளையாடுவதற்கு போட்டியாளர்கள் கடமைப்பட்டுள்ளனர். அதனை அவர்கள் மீறும் பட்சத்தில் போட்டியிலிருந்து விலக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதுடன், இதர தண்டனைகளுக்கும் ஆளாவர். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக எதிரணியினருக்கு வெற்றி வாய்ப்பு வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

## நடுவரின் தீர்ப்பை மதித்தல்

எந்தவொரு போட்டியையும் வழிநடத்துவதற்கு ஒரு நடுவர் இருப்பார். நடுவரின் கையில்தான் போட்டியின் கட்டுப்பாடு முழுமையாக உள்ளது. எனவே, இத்தகைய நடுவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் தீர்ப்பையும் மதிக்கும் மனப்பாங்கு விளையாட்டு வீரர்களுக்கு இருத்தல் வேண்டும். நடுவரின் தீர்ப்பையிட்டு விமர்சிக்கும் அல்லது ஆட்சேபனை தெரிவிக்கும் போட்டியாளர்கள் உண்மையில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்குரிய லட்சணங்களைக் கொண்டிராதவர் என்றே கருதப்படுவார்கள். அது மட்டுமன்றி அவர்களுக்கு கடுமையான தண்டனையும் வழங்கப்படும்.

உதாரணத்திற்கு, கால்பந்தாட்டப் போட்டிகளின்போது நடுவரின் தீர்ப்பை எவரேனும் ஒரு போட்டியாளர் ஆட்சேபித்தால் அவருக்கெதிராக சிவப்பு அட்டை நடுவரினால் காட்டப்பட்டால் அவர் போட்டிக்களத்திலிருந்து வெளியேற்றப்படுவார். கிரிக்கெட் போட்டியென்றால் போட்டியாளருக்கு எதிராக அபராதம் விதிக்கப்படும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தடையும் விதிக்கப்படும். குற்றத்தின் அளவிற்கேற்ப இத்தடை விதிக்கப்படும்.

## எதிரணியை அசௌகரியத்திற்கு ஆளாக்காமல் இருத்தல்

போட்டியின்போது இரண்டு தரப்பினருமே வெற்றியை இலக்காகக் கொண்டு ஆக்ரோஷமாக அல்லது வீரியத்துடன் போட்டியிட்டாலும் எதிரணியினரை சீண்டும் விதமாகவோ அகௌரவப்படுத்தும் விதமாகவோ நடந்து கொள்வது போட்டியாளருக்குரிய நல்ல லட்சணங்களாகக் கொள்ளப்படுவதில்லை.

## வெற்றிக்களிப்பில் நிலை தடுமாறாமை

போட்டியில் வெற்றியீட்டியதும் அந்த வெற்றிக்களிப்பில் தோல்வியுற்ற எதிரணியினரைக் கிண்டல் செய்யும் விதமாகவோ அல்லது அவர்களை ஆத்திரமுறச் செய்யும் விதமாகவோ நடந்து கொள்வது விளையாட்டு வீரர்கள் கைக்கொள்ளக்கூடாத வழிமுறைகளாகும். அவ்வாறே, தோல்வியுற்றவர்கள்கூட தோல்வியை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, தோல்விக்கு நொண்டிக் காரணங்களைக் கூறிக் கொண்டு தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுப்பது போல் நடந்து கொள்வதும் அவர்களின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துவிடும். மாறாக இரண்டு தரப்பினருமே ஒருவரையொருவர் ஆரத்தழுவி ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த வேண்டியதே நல்ல பண்பாகும்.

## ஊக்கமருந்து பாவிக்காமை

நவீன வளர்ச்சி ஒருபுறம் காணப்படினும் விளையாட்டுத்துறைக்கு நவீன வடிவில் ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்தான் ஊக்கமருந்துப் பாவனையாகும். இத்தகைய ஊக்கமருந்துகளை பாவித்தலானது விளையாட்டுத்துறையில் கடுமையாக தடை செய்யப்பட்ட ஓர் அம்சமாகும். அதுமட்டுமன்றி இது உடம்பிற்கும் தீங்கை விளைவிக்கக் கூடியதாகும்.

எவரேனும் ஊக்க மருந்துகளை பாவித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களின் பதக்கங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், வெற்றியும் நிராகரிக்கப்பட்டு எதிரணிக்கு வெற்றி வழங்கப்படும். அத்தோடு, போட்டித்தடைகளும் விதிக்கப்படுவதுடன் போட்டியாளருக்கு பாரிய களங்கமும் ஏற்படும்.

இவ்வாறு அண்மைக்காலங்களில் உலக நாடுகளில் பல போட்டியாளர்கள் போட்டித் தடை விதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆக, போட்டிகளின்போது வெற்றியாளர்களாக வாகை சூடுவதில் மட்டுமன்றி, ஒழுக்கப் பண்புகளை முறைப்படி பின்பற்றுகின்றவர்களே முழுமையான வெற்றியாளர்களாகக் கருதப்படுவர் என்றால் அதில் மிகையில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தலைமையகம்

# எஃப்.பீ.ஐ. என்றால் என்ன?

**எஃப்.பீ.ஐ-F.B.I (Federal Bureau of Investigation) எனும் பெயரில் அழைக்கப்படுவது அமெரிக்காவின் மத்திய புலன் விசாரணை அலுவலகமாகும். 1908 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அலுவலகமானது ஐக்கிய அமெரிக்காவின் சமாதானம் தொடர்பிலான அலுவலகமாகவும் செயல்படுகின்றது.**

## அலுவலகம்

இதன் தலைமை அலுவலகம் ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பல்வேறு இடங்களிலும் அதன் கிளை அலுவலகங்கள் பரவியுள்ளன. அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 52 ஆகும். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களின்படி, சகல கிளைகளும் எஃப்.பீ.ஐ தலைமை அலுவலகத்துடன் ஒன்றிணைந்து, மாவட்ட சட்டதிட்டங்களுக்குக் கீழ் குற்றச்செயல்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அவ்வசதிகள் மாநகர சபை, பிரதேச நிர்வாக அலகு மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பனவற்றின் உதவியுடன் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

## பணிகள்

ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி சட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக விசாரணைகளை நடத்தும் அதிகாரம் எஃப்.பீ.ஐ க்கு உண்டு. 1924 ஆம் ஆண்டில் இந்த மத்திய புலனாய்வு அலுவலகத்தின் அடையாளப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது அதன் ஆவணப்பிரிவில் 810,188 கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால், இன்றோ 100,000,000 இற்கும் மேற்பட்டோரின் கைவிரல் அடையாளங்களைக் கொண்ட அட்டைகள் காணப்படுகின்றன.

கைவிரல் அடையாளங்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எஃப்.பீ.ஐ யினால் கைரேகை அடையாள மத்திய நிலையத்தின் சேவையும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

பிரிதொரு நபரைக் கைது செய்த பின் எஃப்.பீ.ஐ மூலம் அவரது கைவிரல் அடையாளம் பெற்றுக் கொள்ளப்படுவதோடு, ஐந்து செக்கனுக்கும் குறைவான நேரத்திற்குள் குறித்த நபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச் செயல்கள் குறித்த விபரங்கள் குறித்து ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். இந்த ஆய்வு அறிக்கைகளின் பிரதியொன்று சர்வதேச சட்டத்தை செயல்படுத்தும் முகவர் நிலையம் ஊடாக 36 மணி நேரத்திற்குள் மீண்டும் வொஷிங்டனுக்கு அனுப்பி வைக்கப்படும்.

எஃப்.பீ.ஐ நிறுவனத்தின் விஞ்ஞான ஆய்வு கூடத்திலுள்ளவாறே சகல வசதிகளும் சட்டரீதியான அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்தும் முகவருக்கும் வழங்கப்படும். நவீன உபகரணங்களை உபயோகப்படுத்தி, எஃப்.பீ.ஐ நிபுணர்கள் நாள்தோறும் புலனாய்வு அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர். குருதி, மயிர், மண் உள்ளிட்ட வேறு பல முரண்பாடுகளுடன் தொடர்புடையதாக அந்தப் புலனாய்வு அறிக்கை இருக்கும்.

தமது நாட்டில் புரிந்த குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்களை புலனாய்வு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில் இந்த நிபுணர்களால் அரச நீதிமன்றங்களின் மூலம் தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட சாட்சியங்கள் குறித்தே கூடிய கவனம் செலுத்தப்படும்.

1939 ஜூன் மாதம் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஃப்ரேங்ளின் டி.ரூஸ்வெல்ட் அவர்களால் எஃப்.பீ.ஐ (F.B.I) ஆனது பாதிக்கப்பட்டோரின் தேவைகளை பொறுப்புடன் சரியாக செயல்படுத்தும் புலனாய்வு சேவையாகவும் வேறு தேசிய பிரச்சினைகளைத் தீர்க்கும் குற்றவாளிகளை அழிக்கும் அமைப்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் இவ் அமைப்பானது தேசிய ரீதியில் பல்வேறு எதிரிகளையும் ஒற்றர்களையும் அழிக்கும் உள்ளக பாதுகாப்புச் சேவைகளையும் மேற்கொண்டது.




நடமாடும் சேவை

# ருபெல்லா தடுப்பூசி



நோயெதிர்ப்புச் சக்தியும் நோயிலிருந்து தடுக்கும் தன்மையும் உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பு வழங்குவதும் எமது வாழ்விற்கு அத்தியாவசியமானதொரு விடயமாகும். அது எமக்கு இயற்கையாகவும் செயற்கையாகவும் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் நாம் இந்த நோய் எதிர்ப்புத் தன்மையை தடுப்பூசி மூலமோ, மருந்துகள் மூலமோ பெற்றுக் கொள்கின்றோம். இலங்கையிலும் இவ்வாறான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன.

## இலங்கையில்

சிறுவர் சுகாதார வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய செயல் வடிவமாக நாடளாவிய ரீதியில் 'ருபெல்லா' என்று அழைக்கப்படும் ஜேர்மன் சின்னமுத்து தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொடுக்கும் தேசிய வேலைத்திட்டம் இலங்கையிலும் நடைமுறையில் உள்ளது. சிறுமிகள் உட்பட இளம், மத்திய வயதுடைய பெண்களுக்கும் இந்த 'ருபெல்லா' தடுப்பூசியை ஒரு தடவை வழங்குவதனூடாக அவர்களிடத்தில் குறித்த நோய்க்கான நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்படுகின்றது.



## ஏற்படும் பாதிப்புகள்

தாயின் வயிற்றில் குழந்தை கருவுற்ற முதல் மூன்று மாதத்தினுள் தாய்க்கு 'ருபெல்லா' எனும் ஜேர்மன் சின்னமுத்து நோய் ஏற்பட்டால் பிறக்க இருக்கும் குழந்தைக்கு கண்பார்வை இழப்பு, காது கேளாமை, மூளை வளர்ச்சி பாதிப்பு போன்ற குறைபாடுகள் ஏற்படலாம். மேலும், பிறக்க இருக்கும் குழந்தை உடல் ரீதியான, உளரீதியான பாதிப்புக்களை உடையதாகவும் பிறக்கலாம். குழந்தை பிறக்கும் பொழுது இத்தகைய குறைபாடுகளுடன் பிறக்காமல் தடுப்பதற்கே இந்த தடுப்பூசியை முன்கூட்டியே வழங்குகின்றனர். 11 வயதுடைய சிறுமி முதல் 45 வயது வரையிலான பெண்கள் இந்தத் தடுப்பூசி மருந்தை வைத்தியசாலைகளில் ஏற்றிக்கொள்ளலாம்.

1841 ஆம் ஆண்டிலேயே ஜேர்மன் சின்னமுத்து முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது உலகெங்கும் பரவியுள்ள ஒரு நோயாகும். 8 முதல் 10 வருடங்களுக்கு ஒரு முறை இது ஒரு தொற்றுநோயாக உருவெடுத்து வேகமாகப் பரவுவதுண்டு. ஆண், பெண் பேதமில்லாமல் எந்தவொரு வயதினருக்கும் இந்நோய் ஏற்படலாம். இந்நோய் ஒருவருக்கு ஒருமுறை வந்தால் மீண்டுமொருமுறை ஏற்பட வாய்ப்பில்லை. அதாவது, வாழ்நாளில் ஒரு முறை இந்த நோயினால் பாதிக்கப்பட்டால் அதன்மூலம் நிரந்தர நோய்த் தடுப்புத் தன்மை ஏற்பட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 196 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-207) |
|---|---|---|---|---|
| எம்.ஏ.எஸ்.அம்றி, தரம் - 4^A, கமு/அல்-அக்ஸா ம.வித்., கல்முனை. | எஃப்.அப்ரா, தரம் - 9^A, அல்-இர்பான் ம.கல்., பொல்கஹவெல. | எஃப்.சஸ்னா, தரம் - 10, அலவியா மு.ம.வித்., எழுவில. | சின்டரில்லா ஸ்பெக், தரம் - 6, மகாஜனாக் கல்., மட்டக்களப்பு. | த.மதுஷா, தரம் 9^A, புனித பேர்னாதத் கல்., சிலாபம். |

### 1 வழி காட்டுங்கள்



### 3 கணக்குப் புதிர்

மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக எப்படிப் பெருக்கினாலும் விடை 120 வர வேண்டும். அதற்காக ஒரு வரிசையில் 3 இலக்கங்கள் வரும்படி 3 வரிசைகளை எழுத வேண்டும். விடை தெரிந்தால் எழுதி அனுப்புங்கள்.

### அறிவுக்கு விருந்து - 196 விடைகள்

**போட்டி: 02**

(A) உற்று அவதானித்தால் 'மொனாலிசா'வின் உருவத்தைக் காணலாம்.

(B) * ஆம்
* 16 கட்டங்கள்

**போட்டி: 03**

5x5 = 25
5x5 = 25
5x5 = 25
5x5 = 25
100+5-5 = 100

**போட்டி: 04**

1 - நிலநடுக்கம் a) - oval
2 - பணிமனை b) - city
3 - குளிர்ச்சி c) - monarch
4 - கற்சிலை d) - traveller
5 - வெந்நீர் e) - ghee

### 5 குறுக்கெழுத்துப் போட்டி இல. 210




**மேலிருந்து கீழ்**

01. எண்ணெய் எடுக்கப்பயன்படும் ஒரு சாதனம்.
02. சுற்றிவர மதில் அமைக்கப்பட்ட பாதுகாப்பான இருப்பிடம்.
03. கடந்த 3 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் அணியினர் தாக்குதலுக்கு உள்ளான நாடு.
06. பலம்-ஒத்தகருத்துச் சொல்.
07. மாடிகளில் ஏறிச்செல்ல அமைக்கப்பட்டிருப்பது.

**இடமிருந்து வலம்**

01. நீதி, நேர்மை தவறாது நிலவும் ஆட்சியைக் குறிக்கும்.
04. தோழி-ஒத்தகருத்துச் சொல்.
05. ஆழமற்ற குளத்தை இவ்வாறும் அழைப்பர்.
06. (பொதுவாக) பத்திரிகை போன்றவற்றை குறிப்பிட்ட காலம் வரை பெறுவதற்கு அல்லது ஓர் அமைப்பில் அங்கத்தவராக இருப்பதற்கு செலுத்தும் கட்டணம்.
07. உலகின் பெரிய சமுத்திரம்.
08. 'வரி' என்றும் அர்த்தப்படும்.

### குறுக்கெழுத்துப்போட்டி 207 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. ஐப்பசி | 01. ஐம்பது |
| 02. பசு | 05. சுளை |
| 03. துளை | 06. பசை |
| 04. பண்ணை | 08. அணை |
| 07. சைக்கிள் | 09. சிக்கனம் |
| 08. அம்புலி | 11. கிளை |
| 10. களை | 12. புறா |
| | 13. எள் |
| | 14. கூலி |

குறுக்கெழுத்துப் போட்டி -210
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

**பாராட்டுப் பெறுவோர்**

எஸ்.எம்.றினோஜ், தரம் - 12 கலை,
அல்-அதான் ம.வித்., பதுளை.

நா.தர்மிதன், தரம் - 7C,
தி/விவேகானந்தா கல்., உவர்மலை.

பஸ்னா பர்ஹான், தரம் - 11D,
பாத்திமா முஸ்லிம் ம.கல்., கொழும்பு - 12.

### 4

**(A) எதிர்க்கருத்துடைய சொல்லில் கோடிடுக**

1. அந்தரங்கம் - அரங்கம்/பகிரங்கம்
2. இம்மை - மறுமை/வாய்மை
3. சோலை - பாலை/சேலை
4. ஆசை - பேராசை/நிராசை
5. சிறுமை - பெருமை/வறுமை

**(B) கீழுள்ள குறியீடு குறிப்பது;**

1. முன்னால் அபாயகரமான நாற்சந்தி
2. முன்னால் குறுக்கு வீதி
3. முன்னால் சுற்று வளைவு






**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.03.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 199**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### 2 ஒரே மாதிரியான உருக்களில் √ அடையாளமிடுங்கள்



### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீர்கொழும்பு மீண்டும் ஒல்லாந்தர் வசம்

நீர்கொழும்பை போர்த்துக்கேயர் கைப்பற்றியமை ஒல்லாந்தருக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தியது. அதனை நிவர்த்தி செய்ய அவர்கள் எண்ணினர். பிரன்கோய்ஸ் கெரன் எனும் பிரான்சியர் ஒருவரின் கீழ் சேனை ஒன்றைத் திரட்டினர். அந்தப் பிரெஞ்சுக் காரனோ மிகவும் தந்திரமானவன். அவன் கொழும்பைத் தாக்குவதற்கு முயற்சிப்பது போல் போர்த்துக்கேயரை திசை திருப்பினான்.

போர்த்துக்கேயர் உடனடியாகத் தமது சேனைகள் அனைத்தையும் கொழும்பைப் பாதுகாக்கும் பொருட்டு ஒன்று திரட்டினர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பிரன்கோய்ஸ் கெரன் தனதுசேனையுடன் நீர்கொழும்பை நோக்கிப் பயணமானான். கோட்டைக்கு வடக்குப் பக்கமாக அவர்கள் தரை இறங்கினர். மூன்று படை அணிகளாகப் பிரிந்தனர். தாக்குதல் நடத்தினர். அச்சந்தர்ப்பத்தில் நீர்கொழும்புக் கோட்டையின் மேலதிக படை அணித்தளபதியாக அந்தோனியோ மஸ்கரிஞ்ஞா என்பவன் இருந்தான். அவனது பதவிக் காலத்தில் ஒருபோதும் அவன் ஒல்லாந்தரை எதிர்கொள்ளவில்லை. எனினும், அவன் சிறந்த வீரனாகவும் வீரசாகசம் புரிபவனாகவும் திகழ்ந்தான்.

இச்சந்தர்ப்பத்தில் போர்த்துக்கேயத் தளபதி தனது துணிச்சலைக் காட்ட முயற்சித்தான். அத்துடன், தவறான முறையில் போரை எதிர்கொண்டான். இதன் காரணமாக அவனும் அவனது சேனையில் இருந்த பெருந்தொகையானோரும் கொல்லப்பட்டனர். இதனால், மீண்டும் நீர்கொழும்புக் கோட்டை ஒல்லாந்தர் வசமானது.

பின்னர் வி.ஓ.சி என அழைக்கப்படும் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திடம் நிர்வாகம் கையளிக்கப்பட்டது. பிரன்கோய்ஸ் கெரனின் சேனைகள் கொழும்பை நோக்கிப் பயணமாகின.கொழும்புக் கோட்டையைத் தாக்குவதே அதன் நோக்கமாகும்.களனி கழிமுகத்திற்கு அவர்கள் வந்தனர். எனினும், கண்டி மன்னனின் உதவியில்லாமல் கோட்டையைத் தாக்குவதால் பயனில்லை எனத் தெரிந்து கொண்டபின் முயற்சியை கைவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# நம்பகத்தன்மையை உணர்த்தும் கைவிரல் அடையாளம்...!





Four fingers taken simultaneously









இன்றைய காலத்தில் உலகம் பூராவும் நடைபெறுகின்ற குற்றச் செயல்களின்போது குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு கைவிரல் அடையாளங்கள் மூல ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாகவே ஒரு நபரின் கைகளில் உள்ள ரேகைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றத்தை அடைவதில்லை. அவ்வாறே, உலகில் ஒருவரின் கைவிரல் அடையாளத்தை ஒத்த வடிவிலான ரேகைகள் இன்னொருவருக்கு அமைவதுமில்லை.

கைவிரல் அடையாளத்தைப் பயன்படுத்தும் முறை முதன்முதலில் சீனாவில்தான் ஆரம்பமாகியது. அதன் பின்னர் இந்தியாவிலும் ஜப்பானிலும் இந்த முறை பரவியது. இந்தியாவைச் சேர்ந்த கைரேகை நிபுணர் ஒருவர் இந்தியாவிலுள்ள பத்தாயிரம் பேரினது கைவிரல் அடையாளங்களைப் பெற்று ஒன்றுக்கொன்று ஒற்றுமைகள் உள்ளனவா என்று ஆய்வுசெய்து பார்த்தார். அவரின் ஆய்வின்படி அனைத்துக் கைவிரல் அடையாளங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டே இருந்தன. இதன்மூலமாக, ஒவ்வொருவரது கைவிரல் அடையாளமும் மற்றவரிலிருந்து வேறுபட்டிருக்கும் என்பது உலகிற்கு நிரூபித்துக் காட்டப்பட்டது.

எனினும், மேற்குலக நாடுகள் இற்றைக்கு நூற்றி எண்பத்தாறு வருடங்களுக்கு முன்னர்தான் உத்தியோகபூர்வமாக மேற்படி கைவிரல் அடையாள விடயத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தன. எதேச்சையாக நடைபெற்ற ஒரு சம்பவமே இதற்கு மூல காரணமாக அமைந்தது. அதாவது, ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த பண்டிதர் ஒருவர் தனது கல்வி நிறுவனத்தில் எழுதிக்கொண்டிருக்கையில் மரணமாகி விட்டார். இவரது மரணத்தையிட்டு பரிசோதனைகளை நடத்திய 'பார்கிம்' என்ற மருத்துவப் பரிசோதகர், குறித்த பண்டிதர் எழுதிய கடதாசித் தாள்களிலும் தமது சோதனைகளை மேற்கொண்டார். அப்போது அந்தக் கடதாசியில் பண்டிதரின் கைவிரல் ரேகைகள் பதிந்திருப்பதை அவரால் காணமுடிந்தது. இதனையடுத்தே அவர் இந்தக் கைரேகை விடயத்தையிட்டு ஆழமாக ஆராயத் தொடங்கினார். அதனையடுத்து மேற்குலக நாடுகளில் அவர் தனது கண்டுபிடிப்பை பிரபல்யப்படுத்தினார்.

குறிப்பாக சில நாடுகளில் கடவுச்சீட்டுக்களில் கூட அதன் உரித்துடையவரின் கைவிரல் அடையாளத்தைப் பதியச் செய்கின்றனர். மேலும், உலக நாடுகளில் கையொப்பத்திற்குப் பதிலாக கைவிரல் அடையாளத்தைப் பதிவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். காரியாலயங்களில் கூட ஊழியர்களின் வருகை/ வெளியேறல் நேரப் பதிவை மேற்கொள்வதற்கும் இந்த கைவிரல் அடையாள முறையை மேற்கொள்ளும் அளவிற்கு அதன் நம்பகத்தன்மை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கைவிரல் ரேகைகள் குறித்த ஆராய்ச்சிகள் இன்னமும் தொடரவே செய்கின்றன.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மார்ச் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 11, 2009.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org